JULY 17, 2020
FRIDAY
VOL: 006/050
RS. 10.00
LATE CITY

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror




## ‘செப்டெம்பர் வரை கொரோனா சம்பளம்’



மகேஸ்வரி விஜயனந்தன்

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக, வீடுகளிலிருந்து பணிபுரிந்த, பணிபுரியும் தனியார் துறையினரின் மாதாந்தச் சம்பளத்தை, செப்டெம்பர் மாதம் வரையிலும் வழங்குமாறு தொழில்தருநர்களுக்குப் பணிப்புரை விடுப்பதற்கு, அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது.

அந்தக் காலஎல்லை ஜூலை வரை மட்டுமே வழங்கப்பட்டிருந்தது எனத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் பந்துல குணவர்தன,

தொடர்ச்சி P2

வடக்கு இளைஞர்களின்

# ‘மனங்களை வெல்லவேண்டும்’

- நாட்டுத் தலைவர்களிடம் நாமல் கோரிக்கை
- 19ஆவது திருத்தமும் கொவிட்-19உம் தடையாக உள்ளன



வடக்கு இளைஞர்களை, தேசிய அரசியலில் உள்வாங்கிக்கொள்ள வேண்டியது அவசியமெனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஹம்பாந்தோட்டை மாவட்ட வேட்பாளர் நாமல் ராஜபக்‌ஷ, அந்த முயற்சியை ஒருபோதும் கைவிட்டுவிட வேண்டாமென, இந்நாட்டுத் தலைவர்களிடம் கோரிக்கை விடுத்தார்.

தொடர்ச்சி P2

கொரோனாவால் பாதிக்கப்பட்டோருக்கு

## ‘ரூ. 10 ஆயிரம்’

### விஞ்ஞாபனத்தை வெளியிட்டு ஐ.தே.க உறுதி



கொரோனா வைரஸ் அச்சுறுத்தல்களால், வெளிநாடுகளில் தொழில்வாய்ப்புகளை இழந்து நாடு திரும்பியோருக்கும், உள்நாட்டில் தொழில் வாய்ப்புகளை இழந்தோருக்கும் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவை வழங்குவதாக ஐக்கிய தேசிய கட்சி உறுதியளித்துள்ளது.

தொடர்ச்சி P2

அங்குலானை

## பொலிஸ் நிலையம் மீது கல்லெறிந்துத் தாக்குதல்

### 3 பெண்கள் உட்பட 13 பேர் கைது

அங்குலானை பொலிஸ் நிலையத்தின் மீது தாக்குதல்களை மேற்கொண்டார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில், பெண்கள் மூவர் உட்பட 13 பேரை, பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் நேற்று (16) பிற்பகல் இடம்பெற்ற அமைதியற்ற நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, பொலிஸ் கலகமடக்கும் பிரிவினர் வரவழைக்கப்பட்டு, கண்ணீர்ப்புகைத் தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சி P2

வாகனங்களை

## நடைபாதையில் நிறுத்தினால் இன்று முதல் பறிமுதல்

நடைபாதை மற்றும் அனுமதிக்கப்படாத இடங்களில் வாகனங்களை நிறுத்தும் சாரதிகளுக்கு எதிராக, இன்று (17) முதல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக, பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

விருப்பு வாக்குக்காக

## ‘பொய்களைப் பரப்பாதீர்’

தேர்தல் காலமென்பதால், தங்களின் விருப்பு வாக்குகளை அதிகரித்துக் கொள்வதற்காக, கொரோனா வைரஸ் பரவல் பற்றிய அவதூறுகளைச் சில அரசியல்வாதிகள் பரப்பிவருவதாகவும், அவற்றை உடனடியாகக் கைவிடவேண்டுமெனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ கேட்டுக்கொண்டார்.

ஊடகப் பிரதானிகளை நேற்று (16) காலை, அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு மேலும் கூறுகையில்,



தொடர்ச்சி P2

# நடமாடும் வாக்களிப்பு நிலையம்

ஒகஸ்ட் 5ஆம் திகதியன்று நடைபெறும் பொதுத் தேர்தலுக்கான வாக்களிப்பின் போது, நடமாடும் வாக்களிப்பு நிலையத்தை அறிமுகப்படுத்துவது தொடர்பாக,

தொடர்ச்சி P2



## ‘வீண் அச்சத்தைப் போக்கவே பாடசாலைகளை மூடினோம்’

-மகேஸ்வரி விஜயனந்தன்

பாடசாலை மாணவர்களிடையே வீண் அச்சத்தை ஏற்படுத்த சிலர் செயற்பட்டதாகத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன, எனவே மாணவர்களின் வீண் அச்சத்தைப் போக்குவதற்காகவே தற்காலிகமாகப் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டதென்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## சின்னங்கள் இரண்டில் ஒரு தேரர் போட்டி

### ஆராய்கிறது தேர்தல் ஆணைக்குழு

பொதுத் தேர்தல் சூடுபிடித்துள்ள நிலையில், பல்வேறான சுவாரஸ்யமான சம்பவங்கள், கொஞ்சம் கொஞ்சமாக வெளிவர ஆரம்பித்துள்ளன. அதில், வேட்பாளரான தேரர் ஒருவர், இரண்டு கட்சிகளின் கீழ், இரண்டு விருப்பு இலக்கங்களுடன் போட்டியிடுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



மன்னாரில்

## ‘இல்மனைட் ஆய்வுக்கு அனுமதி இல்லை’

மகேஸ்வரி விஜயனந்தன்


அவுஸ்திரேலிய நிறுவனமொன்று உள்ளூர் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து, மன்னார் கடற்கரைப் பிரதேசங்களில் இல்மனைட் தொடர்பில், ஆய்வுகளை நடத்துவதாக வெளியான செய்தியில் எவ்விதமான உண்மையும் இல்லையெனத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர்,

தொடர்ச்சி P2

பிணைமுறி மோசடி விவகாரம்:

## பணச்சலவைச் சட்டத்தின் கீழ் சி.ஐ.டி விசாரணை

இலங்கை மத்திய வங்கியில் 2015ஆம் ஆண்டு 27ஆம் திகதி இடம்பெற்ற பிணைமுறி மோசடி விவகாரம் தொடர்பில் பணச்சலவையைத் தடுக்கும் சட்டத்தின் கீழ் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என, கொழும்பு நீதவான் நீதிமன்றத்துக்கு, குற்றப்புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி) அறிவித்துள்ளது.




அந்த முறைப்பாடு, கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவின் முன்னிலையில், நேற்று (16) அழைக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள,

தொடர்ச்சி P2



PAGE 1 தொடர்ச்சிகள்

# 'செப்டெம்பர் வரை...

அடிப்படைச் சம்பளத்தில் 50 சதவீதம் அல்லது, 14,500 ரூபாயைச் செலுத்துவதற்கான காலஎல்லையை நீட்டிக்கவே, அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு மேற்கண்டவாறு தெரிவித்த அவர், இந்த யோசனை அமைச்சர் தினேஸ் குணவர்தனவால் சமர்ப்பிக்கப்பட்டது என்றார். தொழில் தொடர்புகள் அமைச்சருக்கும் தனியார் துறையினருக்குமிடையில் இடம்பெற்ற கலந்துரையாடல்களுக்குப் பின்னர், மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமையவே இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது என்றார்.

# 'வீணன் அச்சத்தை போக்கவே...

மாணவர்களுக்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள விடுமுறை நீடிக்கப்படுமா என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குத் தொடர்ந்து பதிலளித்த அமைச்சர், இந்த விடயம் தொடர்பில் நேற்று முன்தினம் (15) நடைபெற்ற அமைச்சரவை சந்திப்பில் கல்வி அமைச்சர், ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கிடையில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டதென்றார்.

பாடசாலை மாணவர்களுக்கு, வீண் பயத்தை ஏற்படுத்த பல்வேறு தரப்பால் நடவடிக்கை எடுக்கப்பட்டதாலேயே, மாணவர்களின் பயத்தைப் போக்க, தற்காலிகமாகப் பாடசாலை மூடப்பட்டது என்றார்.

பாடசாலைகள் மூடப்பட்டாலும் பல்கலைக்கழகங்கள் மூடப்படவில்லை எனத் தெரிவித்த அவர், இறுதியாண்டுப் பரீட்சைகளை நிறைவு செய்வதற்காகவே சுகாதாரப் பரிந்துரைகளைப் பின்பற்றி, பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்டுள்ளன. எனவே, பாடசாலைகள் அடுத்த வாரம்



ஆரம்பிக்கப்படுமெனத் தான் நம்புவதாகவும் இதன்பின்னர், உயர்தரம், புலமைப்பரிசில் பரீட்சைகளை நடத்துவதற்கான திகதிகள் அறிவிக்கப்படும் என்றார்.

# 'இல்மனைட்..

அமைச்சர் பந்துல குணவர்தன, அவ்வாறானதோர் ஆய்வுக்காக, எந்தவொரு நிறுவனத்துக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்றார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

இரண்டு நிறுவனங்களுக்கு இடையில், செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தத்துக்கு இணங்க, இவ்வாறானதோர் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது. அந்த ஆய்வு, எதிர்காலத்தில் விஸ்தரிக்கப்படவுள்ளது என வெளியான செய்தி தொடர்பில், அமைச்சர் விமல் வீரவன்ச, அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வந்துள்ளார்" என்றார்.

"இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பில், மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்த, முழுமையான அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதற்காக, அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது" என்றார்.

# 'மனங்களை வெல்லவேண்டும்'

2015ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், எதிர்க்கட்சி என்ற பேரில் ஒன்றிணைந்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சி, குறுகிய காலத்திலேயே உள்ளூராட்சி மன்றத் தேர்தல், ஜனாதிபதித் தேர்தல் ஆகியவற்றை வெற்றிகொண்டதாகவும் தெரிவித்தார்.

எல்லாச் செயற்பாடுகளிலும், அரசமைப்பின் 19ஆவது திருத்தமே தடையாக இருந்துள்ளதெனத் தெரிவித்த அவர், அன்று அரசமைப்பின் 19ஆவது திருத்தம் இருந்ததைப் போல், இன்று கொவிட் - 19 இருக்கிறது என்றும் கூறினார்.

19ஆவது திருத்தத்துக்கு, துரதிர்ஷ்டவசமாகத் தானும் ஆதரவளிக்க நேர்ந்ததாகத் தெரிவித்த நாமல் ராஜபக்ஷ, 19 தடவைகள் திருத்தப்பட்ட திருத்தத்தை மீண்டும் திருத்தம் செய்ய எதிர்பார்ப்பதாகவும் அதன்படி, 19இல் ஒரு சில திருத்தங்களைச் செய்யாமல், முழுமையானதோர் அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம், கலவரங்களின்போது, வடக்கிலுள்ள இளைஞர்கள் புலிகளாகவும் தெற்கிலுள்ள இளைஞர்கள் இராணுவமாகவும் கட்டமைக்கப்பட்டனர் என்றும் சுட்டிக்காட்டிய அவர், பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க காலத்திலும், வடக்கிலுள்ள தமிழ் இளைஞர்களை விட, தெற்கிலுள்ள சிங்கள இளைஞர்களே அதிகளவில் உயிரிழந்தனர் என்றும் சாடினார்.

அத்துடன், அர்ஜுன் அலோசியஸ் என்பவர், தனது நண்பராக இருந்தாலும், நட்பு என்பதும் திருட்டுச் செயலுக்கு உதவி செய்வது என்பதும் இரு வேறுபட்ட விடயங்கள் என்றும் எடுத்துரைத்த நாமல், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் சஜித் பிரேமதாஸவும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பைப் பயன்படுத்திக்கொண்டே, வடக்கின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டனர் என்றும் சாடினார்.

அவ்வாறு வாக்குகளைப் பெறுவது, கொள்ளையடிப்பதற்கு நிகரானதெனச் சுட்டிக்காட்டிய அவர், வடக்கில் கிடைத்த எட்டு சதவீத வாக்குகளையும், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, தனித்து நின்றே பெற்றுக்கொண்டது என்றார்.

30 வருடங்களாக, புலிகள் அமைப்புடன் யுத்தமொன்றை முன்னெடுத்திருந்ததாகவும் அந்தக் காலகட்டத்தில், தமிழ் மக்களுடன் அரசாங்கம் மோதாவிட்டாலும், தமிழ் மக்கள்தான் அந்த யுத்தத்துக்குள் சிக்குண்டு பாதிக்கப்பட்டனர் என்றும், அதனால், வாக்குகள் கிடைக்கவில்லை என்பதை மய்யப்படுத்திக் கொண்டு, அவர்களைப் புறக்கணிக்காமல், வடக்கிலுள்ள இளைஞர்களின் மனதை வெற்றிகொள்வதற்காக, இன்னும் சில காலங்கள் காத்திருக்க வேண்டுமெனவும் தெரிவித்தார்.

ஜே.வி.பி கிளர்ச்சிக்கு பின்னர், 30 வருடங்கள் கடந்துதான் ஜே.வி.பிக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையிலான உறவு மேம்பட்டதெனத் தெரிவித்த அவர், வடக்கு இளைஞர்களின் மனங்களை வெற்றிக்கொள்ளும் போராட்டத்தைத் தாங்கள் கைவிடப்போவதில்லை என்றும் அவர் கூறினார்.

அத்தோடு, அரசியல் ரீதியாக நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், அவர்களுக்கு அவசியமான தேவைகளைப் பூர்த்திசெய்ய வேண்டும் என்பதோடு, 30 வருடங்களுக்கு முன்பாக, நாட்டின் தேசிய அரசியலோடு ஒன்றித்திருந்த வடக்கு மாகாணம், விலகியிருக்கும் நிலை ஏன் உருவானது என்றும் கேள்வி எழுப்பினார்.

தனியார் தொலைக்காட்சியொன்றுக்கு அவர் வழங்கிய செவ்வியிலேயே, மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பணச்சலவை...




பெர்ப்பெச்சுவல் டிரெஷரீஸ் நிறுவனத்தின் உரிமையாளரான அர்ஜுன் அலோசியஸ் உட்பட, சந்தேகநபர்கள் ஏழு பேரும், நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

"இந்தச் சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்படுகின்றன" எனக் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சார்பில் ஆஜராகியிருந்த அதிகாரிகள், நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டுவந்தனர்.

அதனடிப்படையில், அந்த முறைப்பாட்டை நவம்பர் மாதம் 12ஆம் திகதியன்று மீளவும் அழைப்பதற்குத் தீர்மானித்த நீதிமன்றம், விசாரணைகளின் முன்னேற்றம் தொடர்பிலான அறிக்கையை அன்றைய தினம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்குக் கட்டளையிட்டது.

# நடமாடும் வாக்களிப்பு...

தேசிய தேர்தல் ஆணைக்குழு கவனம் செலுத்தி வருகின்றது.

தனிமைப்படுத்தலில் இருக்கும் வாக்காளர்களும் வாக்களிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்த, நடவடிக்கை எடுக்கப்படுமென, தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இது தொடர்பான கலந்துரையாடல், உரிய அதிகாரிகளுடன் நேற்று (16) நடைபெற்றது. மேலதிக கலந்துரையாடல்களை, தொடர்ச்சியாக நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இதேவேளை, தனிமைப்படுத்தலில் இருக்கும் வாக்காளர்கள் சாதாரண வாக்களிப்பு நிலையத்துக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனத் தெரிவித்த அவர். அதற்குப் பதிலாகவே, நடமாடும் வாக்களிப்பு நிலையத்தை அமைப்பது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை, தபால் மூல வாக்களிப்புக்குத் தகுதிப் பெற்று, தனிமைப்படுத்தலில் இருப்போர், வாக்களிப்பதற்கு வேறொரு நாள் வழங்கப்படும் என்றார்.

# சின்னங்கள்...

இரத்தினபுரி மாவட்டத்திலேயே இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது. ஜனசெத்த பெரமுனவின் டிரக்டர் சின்னத்தின் கீழ் 3ஆம் இலக்கத்தில் போட்டியிடும் கொலோன் ஸ்ரீ சாந்தா விஜய தேரர், கொடியைச் சின்னமாகக் கொண்ட அபே ஜனபல கட்சியின் கீழ், 2ஆம் விருப்பிலக்கத்தின் கீழ் போட்டியிடுகின்றார்.

வேட்பாளர் பெயர், விருப்பிலக்கம், சின்னம் ஆகியன தபால்மூல வாக்குப்பதிவுக்காக, வாக்களிப்பு மத்திய நிலையங்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதன்போதே, கொலோன் ஸ்ரீ சாந்தா விஜய தேரர், இரண்டு கட்சிகளின் கீழ் போட்டியிடுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதுதொடர்பில், விசாரணைகளை முன்னெடுக்குமாறு தேர்தல் ஆணைக்குழு, இரத்தினபுரி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிக்குப் பணித்துள்ளது.

வேட்பாளர் ஒருவர், இரண்டு கட்சிகளின் கீழே போட்டியிடுகின்றார் என்றால், அவ்வாறான கட்சிகளின் வேட்புமனுக்கள் ஏன் நிராகரிக்கப்படவில்லை எனக் கேள்வியெழுப்பப்பட்டுள்ளதுடன், இன்றேல், ஒரே பெயரைக்கொண்ட இரண்டு நபர்களா என்பது தொடர்பிலும் தேடியறிந்து அறிவிக்குமாறும் ஆணைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

# 'ரூ. 10 ஆயிரம்'...

நாடாளுமன்றத் தேர்தலுக்காக, அக்கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை நேற்று (16) வெளியிட்டது. அதிலேயே மேற்கண்டவாறு உறுதியளிக்கப்பட்டுள்ளது.

அந்த விஞ்ஞாபனத்தில், நாடாளுமன்றத் தேர்தலுக்கு சிறிது நாள்களே உள்ள நிலையில் நாட்டின் மோசமான நிலையில் நிதிமுகாமைத்துவத்தை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது என்றும், கொரோனா வைரஸின் மீது அந்தப் பழியைச் சுமத்திவிட்டுத் தப்பிக்கொள்ளும் தந்திரோபாயத்தை அரசாங்கம் தற்போது கையாளுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் குழப்பத்திலிருந்து நாட்டை மீட்டெடுக்க 480 பில்லியன் ரூபாய்களை நாட்டில் புழக்கத்தில் விட வேண்டுமென்பதோடு, அதனால் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை மீட்டெடுக்க அதற்குத் தடையாகவுள்ள முடிச்சுகளை அவிழ்க்க வேண்டுமென்றும் தெரிவித்தார்.

அதற்காகச் சர்வதேசத்தின் நம்பிக்கையை வெற்றிகொண்டு, கொரோனா வைரஸ் இரண்டாவது அலை உருவாவதைத் தடுக்க வேண்டுமெனவும், இவ்வருடத்தில் வெளிநாட்டு தொழிலாளர்கள் மூலம் கிடைக்கும் 700 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாடு இழக்க நேரிடும் என்பதோடு 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை நாடு கடனாகச் செலுத்த வேண்டியுள்ளதெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால், கொரோனா வைரஸ் அச்சுறுத்தலால் தொழில்வாய்ப்புகளை இழந்து வெளிநாடுகளிலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்களுக்கும், உள்நாட்டு ஊழியர்களுக்கும் மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுமெனவும், என்டர்பிரைசஸ் ஸ்ரீ லங்கா திட்டத்தின் கீழ் 50 மில்லியனுக்குக் குறைந்த கடன் திட்டமும் வழக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.ள

ஆசிய வங்கியின் 20 பில்லியன் உதவித்திட்டத்தைப் பெற்று, சிறிய மற்றும் மத்திய தர பொருளாதாரத்தை ஊக்குவிப்பதாகவும், தனியார் துறை, சுற்றுலாத்துறை, லீசிங் செலுத்துவோரின் நிலைமைகளை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

# பொலிஸ் நிலையம்...

அங்குலானை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் ஒருவர், சில தினங்களுக்கு முன்னர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், அங்குலானை பிரதேசத்தைச் சேர்ந்த மீனவர் ஒருவர் உயிரிழந்தார்.

அந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு, மொரட்டுவ நீதவான் நீதிமன்றத்தில், நேற்று (16) நடைபெற்றது. இந்நிலையில், குறித்த சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியாளர்களை இருவரை, நேற்று அதிகாலை 5 மணியளவில், ஜீப் வண்டியில் வந்த பொலிஸார் அழைத்துச் சென்றனர் எனக் கூறியும் சந்தேகநபரைப் பொலிஸார் கைது செய்யவில்லையெனக் குற்றஞ்சாட்டியுமே, பொலிஸ் நிலையத்தின் சொத்துகள் மீது கல்லெறிந்துத் தாக்குதல் நடத்தி, பிரதேச மக்கள், தங்களது எதிர்ப்பை வெளியிட்டனர்.

சொத்துகளுக்கான சேதங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுமாறும் மரணமடைந்தவரின் தரப்பினருக்கு ஏதாவது அசாதாரணம் இடம்பெற்றிருந்தால், அது தொடர்பிலும் அறிக்கையிடுமாறும், மேல்மாகாணத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அறிவித்துள்ளார். 3 பெண்கள் உட்பட 13 பேர் கைதுபொலிஸ் நிலையம் மீது

கல்லெறிந்துத் தாக்குதல்

# நடைபாதையில் நிறுத்தினால் இன்று முதல் பறிமுதல்

அத்துடன், இவ்வாறு நிறுத்தப்படும் வாகனங்களைப் பறிமுதல் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் வாகனத்தை எடுத்துச் செல்வதற்கான செலவை, அவ்வாகனத்தின் உரிமையாளரே ஏற்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துரைத்துள்ள அவர், நடைபாதைகள் மற்றும் அனுமதிக்கப்படாத இடங்களில் வாகனங்களை நிறுத்துவதால், பாரிய விபத்துகள் ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டியதுடன், இவ்வாறான வாகனங்களைத் தேடிப் பறிமுதல் செய்யும் விசேட தேடுதல் நடவடிக்கை, இன்று (17) முதல் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை 'வாகனங்களை நிறுத்துவதற்குத் தடை' என்று அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ள பகுதிகளில், வாகனங்களை நிறுத்துவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுமாறும், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், வாகன சாரதிகளுக்கு, பிரதிப் பொலிஸ் மா அதிபர் அறிவுறுத்தியுள்ளார். வீதிகளில் அனுமதிக்கப்படாத பகுதிகளில் வாகனங்களை நிறுத்தும் வாகன சாரதிகளுக்கு எதிராக, மோட்டார் போக்குவரத்துச் சட்டத்துக்கு அமைவாகவும் தேசிய நெடுஞ்சாலைகள் சட்டத்தின் கீழும் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# 'பொய்களைப் பரப்பாதீர்'

"ஜனவரி 26ஆம் திகதியில்தான், முதலாவது கொரோனா வைரஸ் தொற்றாளர் பற்றி இலங்கை அறிந்து கொண்டது. அதன் பின்னர், துரிதமாகச் செயற்பட்ட எமதரசாங்கம், கொரோனா வைரஸ் பரவலைப் பாரியளவில் தடுத்திருந்தது.

இத்தகைய நோயாளர்கள் சமூகத்தில் இனங்காணப்பட்டவர்கள் இல்லை. வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களே பாரியளவில் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்றார்கள். ஆகையால், மக்கள் மத்தியில் அநாவசியமான பயங்களைத் தோற்றுவிக்க வேண்டாம். தேர்தல் காலத்தில் விருப்பு வாக்குகளைப் பெறவேண்டும் என்பதற்காக, மக்களைப் பலிக்கடாவாக்கி, பீதியின் மத்தியில் அவர்களை வைத்திருக்க வேண்டாம் என, அனைத்துக் கட்சி வேட்பாளர்களையும் கேட்டுக்கொள்கிறேன்" என, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறினார்.

வர்த்தமானி வெளிவரும் பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய சுகாதார வழிகாட்டல்கள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல், இன்னும் இரண்டு நாள்களுக்குள் வெளியிடப்படும் என, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி தெரிவித்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஊடகப் பிரதானிகளுக்கும் இடையில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலில் கலந்துகொண்டபோதே அவர் இதைக் கூறினார்.

"தேர்தல் ஆணைக்குழுவின் பரிந்துரைகள் எமக்குக் கிடைத்திருக்கின்றன. சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலில் உட்படுத்த வேண்டிய விடயங்களை, அவர்கள் பட்டியலிட்டிருக்கிறார்கள். இந்த விவரங்களை நீதியமைச்சின் ஆலோசனைக்காக அனுப்பியிருக்கிறோம். அவர்களின் அறிவுறுத்தல் வந்தவுடன், ஜனாதிபதியின் செயலாளரூடாக, இரண்டொரு நாள்களில் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவுள்ளோம்.

"தேர்தல் ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்ட சுகாதாரத் தேவைகளை, வழிகாட்டியாக நாங்கள் முதலில் வர்த்தமானிமூலம் அறிவிக்கவுள்ளோம். அதன் பின்னர், தேவைப்படுமாக இருந்தால் ஏனைய சுகாதார வழிகாட்டல்களை உள்ளடக்கிய அரச வர்த்தமானியொன்றை வெளியிடுவதற்கும் உத்தேசித்துள்ளோம்" என்றார்.

## பிரசாரம் தொடரும்

"கொரோனா வைரஸ் பரவல் தொடர்பான தளம்பல்நிலை காணப்பட்டமையால், மூன்று நாள்களுக்கு எங்களுடைய தேர்தல் பிரசாரங்களை ஒத்தி வைத்திருந்தோம். தற்போது, சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, எமது பிரசாரக் கூட்டங்களை நடத்தவுள்ளோம்.

"கொரோனா வைரஸ் வதந்திகள் வந்தவுடன், முழு நாட்டையும் முடக்கவேண்டும் என்று கோருகின்றனர். அப்படியொரு நிலைமை இன்னமும் ஏற்படவில்லை. இனங்காணப்பட்ட பிரதேசங்களை உடனடியாக முடக்கி, சம்பந்தப்பட்டவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதன் மூலமாக, சமூகமட்டத்தில் கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுத்து வருகிறோம்" எனவும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

## பயப்படத் தேவையில்லை

"கொரோனா வைரஸ் தொற்றாளர் இனங்காணப்பட்ட பிரதேசங்களில், சுகாதார உத்தியோகத்தர்கள் தமது கடமைகளைச் செய்யும்போது, பொதுமக்கள் பயங்கொள்ளத் தேவையில்லை" என, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

"ஒருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாகச் சந்தேகிக்கப்படுமிடத்து, அவருடன் தொடர்பிலுள்ள சுமார் 20 பேர்வரை பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும். அப்படியான நிலையில், பிசிஆர் பரிசோதனைக்காக மாதிரிகளைச் சேகரிக்க அவ்விடத்துக்கு வரும் உத்தியோகத்தர்கள் அணிந்திருக்கும் ஆடைகளைப் பார்த்து, மக்கள் பயங்கொள்கின்றனர். பாதுகாப்பு ஏற்பாடாகவே இத்தகைய மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. ஆகையால், மக்கள் எவ்வித பீதியுமின்றி ஒத்துழைப்பு வழங்க வேண்டும்" என்றார்.

## தேர்தல் நடக்கும்

எக்காரணம் கொண்டும் பொதுத் தேர்தல் வாக்களிப்பைப் பிற்போடும் எண்ணம் தமக்கில்லை எனத் தெரிவித்த பிரதமர், அத்தகைய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கே இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார். வழிமுறைகளைப் பின்பற்றித் தேர்தல்களை நடத்தக்கூடிய வல்லமை எமதரசாங்கத்துக்கு இருக்கிறது. ஆகையால், எக்காரணம் கொண்டும் பொதுத்தேர்தல் வாக்களிப்பைப் பின்போடும் எண்ணம் சாத்தியப்படாது எனவும் கூறினார்.

# தலைவரானார் மஹேல



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் மஹேல ஜயவர்தன, சிங்கள கிரிக்கெட் கழகத்தின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இந்த களகத்தின் வருடாந்த பொதுக்கூட்டத்தின்போதே, மஹேலவுக்கு தலைமைத்துவத்தை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் உருவான திறமையான கிரிக்கெட் வீரர் இவர் என்பதால், அவருக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மஹேல ஜயவர்தன, மேற்படி கழகத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினராக இருந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘கொரோனாவின் தன்மை மாறலாம்’

## 2ஆவது அலை வராது என்கிறார் இராணுவத் தளபதி

கொரோனா வைரஸ் பரவலில் இருந்து சகலரும் தம்மைப் பாதுகாத்துகொள்ள முன்வர வேண்டுமெனக் கோரிக்கை விடுத்த இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் ஷவேந்திர சில்வா, இதுவரை கொரோனாவின் இரண்டாவது அலை நாட்டில் உருவாகவில்லை என்றும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துரைத்த அவர், கொரோனா வைரஸ் தொற்றாளர்களை அடையாளம்காணும் வேலைத்திட்டத்தை இலங்கை அரசாங்கமே, மிக திறமையாகவும் சரியான முறையிலும் முன்னெடுத்திருந்தது. அதன் பலனாகவே, 50 நாள்களில் கொரோனா வைரஸ் தொற்றை சமூகத்துக்குள் பரவாமல் தடுப்பதற்கான இயலுமை கிடைத்தது என்றார்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்று நாட்டுக்குள் எவ்வாறு பரவுகிறது என்பதை அறிந்துகொண்டே, தேடுதல்களை முன்னெடுக்க வேண்டுமென தெரிவித்த அவர், நேற்று முன்தினம் (15) கொரானா வைரஸ் தொற்றுக்குள்ளான 9 பேர் இன்ஙகாணப்பட்டனர் என்று தெரிவித்த அவர், அவர்களில், 8 பேர் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்கள் என்பதுடன், ஒருவர் மாத்திரமே இலங்கையில் இருந்தவர் எனவும் தெரிவித்தார்.



கந்தகாடு தனிமைப்படுத்தல் முகாமில், இதுவரை 533 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். விடுமுறையில் சென்ற அதிகாரிகள், அவர்களுடன் தொடர்புபட்டவர்கள் குறித்தே, விசேட அவதானம் செலுத்தப்பட்டு வருகிறது என்று கூறிய அவர், அவர்கள் சமூகத்துக்குள் நடமாடுவதை முழுமையாக கட்டுப்படுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்புகளை மேற்கொண்டிருந்த முதற்கட்ட நபர்கள் சகலரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்த இராணுவத் தளபதி, இவர்கள் சகலருக்கும் பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பிசிஆர் அறிக்கை இதுவரையில் முழுமையாக கிடைக்கவில்லை எனவும் தெரிவித்தார்.

தொற்றாளர்களாக இனங்காணப்பட்டவர்கள் சமூகத்துக்குள் இருந்து அடையாளம் காணப்படவில்லை என்றும் கந்தகாடு தனிமைப்படுத்தல் முகாமில் இருந்தே, அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

எனவே, நாட்டை முடக்குவதற்கான அவசியம் தற்போது ஏற்படவில்லை என்று தெரிவித்த இராணுவத் தளபதி, இராஜாங்கனையில் கொரோனா வைரஸ் பரவியிருக்கக்கூடுமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும், அங்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனைகள் மூலம், கொரோனா அச்சுறுத்தல் இல்லை என்பது தெரியவந்துள்ளது என்றார்.

எவ்வாறாயினும், கொரோனா வைரஸின் நடத்தை தொடர்பாக சரியானதொரு விளக்கத்தைக் கூற முடியாது என்று கூறிய இராணுவத் தளபதி, நாட்டில் திருப்திகரமான முறையில், கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது என்றார்.

# 10 மாவட்டங்களில் புதிய பல்கலைக்கழகங்கள்

## அமைச்சரவை அனுமதி

■ மகேஸ்வரி விஜயனந்தன்

இதுவரை ஒரு பல்கலைக்கழகம் கூட இல்லாத 10 மாவட்டங்களில், புதிதாக பல்கலைக்கழகங்களை அமைக்க தான் முன்வைத்த யோசனைக்கு, அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன, இதற்கமைய, தொழிற் சந்தையை இலக்காகக் கொண்டு, தொழிநுட்ப பல்கலைக்கழகங்களை நாட்டில் அமைக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், நேற்று (16)நடைபெற்ற, அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் கருத்துரைத்த அமைச்சர்,

நுவரெலியா, களுத்துறை, ஹம்பாந்தோட்டை, மாத்தளை, புத்தளம், மன்னார், முல்லைத்தீவு, காலி, பொலன்னறுவை, கேகாலை ஆகிய மாவட்டங்களில் தகவல், பொறியியல், உயிரியல் தொழிநுட்பத்துக்கான வசதிகளை விரிவுபடுத்துவதை இலக்காகக்கொண்டு, இந்தப் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்படவுள்ளன என்றார். இதற்கான ஆய்வுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.




# பஸ், ரயில்களில் யாசகம் பெறத் தடை

கொவிட் 19 வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில், பஸ், ரயில்களில் யாசகம் பெறுவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமாறு, போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ரயில்வே பொது முகாமையாளர் ஆகியோருக்கு அறிவுறுத்தியுள்ளார்.



பொதுப் போக்குவரத்தின்போது, கொவிட் 19 பரவலைத் தடுப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் குறித்து, அமைச்சில் கலந்துரையாடியபோதே, அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். பஸ், ரயில்களில் யாசகம் பெறும் செயற்பாடானது, கொவிட் 19 பரவல் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலையில் பெரும் அச்சுறுத்தலாக காணப்படுவதாக, அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளதுடன், இதற்கு தடை விதிக்குமாறு, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அத்துடன், யாசகர்களுக்கு தண்டனை வழங்காது, அவர்களுக்கு கொவிட் 19 குறித்து தெளிவுப்படுத்துமாறும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.


**வீடு விற்பனைக்கு**

வெள்ளவத்தை, அலெக்ஸாண்டர் வீதியில் இலக்கம் 6.3P 3 படுக்கையறைகள், உள்ளக குளியறைகள், முன் மண்டபம், சமயலறை, ஊழியர் குளியறைகள், வாகன தரிப்பிடம், ரூப் கார்டண் 0776550872

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

கம்பனியின் பெயர்:
ஜ.எஸ்.சி. பொடி என்ஜினியரிங் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல: P V - 127649
பதிவு செய்த அலுவலகம்:
இல. 160/285 கே, லேக் வீதி,
ஒவ் விக்ரமசிங்ஹபுர வீதி, பத்தரமுல்லை.

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு இணங்க

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு 13 ஜூலை 2020 ஆம் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

கம்பனியின் பெயர்:
டிமோ லைஃப்லைன் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல: P V - 00224261
பதிவு செய்த அலுவலகம்:
இல. 65, ஜேத்தவனா வீதி,
கொழும்பு – 14.

ஜேசி என்ட் கம்பனி
கம்பனி செயலாளர்கள்
இல. 9/5, தம்பியா எவன்யு, கொழும்பு – 7.

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகளின் சட்டத்தின் பிரிவு 9 (1) விதிகளின் கீழ் கீழ்க்கானும் கம்பனியின் கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளது என இத்தால் வழங்கபடுகின்ற அறிவித்தல்.

எல் எஸ் என்ஜினியரிங் சொலூஷன்ஸ் (பிரைவட்) லிமிட்டட்
P V - 00213929
இல. 154/ஈ, ஹியலகம, கம்பஹா.

கே டி எஸ் ஜே இன்டெர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்
P V - 00217672
இல. 08, அபுவல, குனப்பன.

ருட்டிக் (பீவீடீ) எல்டீடி
P V - 00223024
இல. 314/59, கோனமதித்த வீதி, பிலியந்தலை.

ஸ்பில்பர்க் லொஜிஸ்ட்டிக்ஷ் வன் (பிரைவட்) லிமிட்டட்
P V - 00224123
இல. 568/2, அலுத்மாவத்தை வீதி, கொழும்பு - 15.

கம்பனி செயலாளர்கள்


உள்ளூராட்சிமன்றங்களுக்கான அதிகாரங்களை

# முழுமையாக நடைமுறைப்படுத்தினால் பிரச்சினைகள் தீரும்’

உள்ளூராட்சிமன்றங்களுக்கு காணப்படும் அதிகாரங்களை முழுமையாக நடைமுறைப்படுத்துவதனூடாக பல பிரச்சினைகளுக்கு தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென தெரிவித்துள்ள வடமாகாண ஆளுநர் பீ.எஸ்.எம்.சார்ள்ஸ், வட மாகாணத்தில் கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளை சுகாதாரத்துறையினருடன் இணைந்து முன்னெடுத்த உள்ளூராட்சிமன்றத்தின் பணிகளை பாராட்டியுள்ளார்.

மேலும் உள்ளூராட்சிமன்ற அதிகாரிகள் அனுமதியளிக்கப்படாத எந்தவொரு செயற்பாடுகளுக்கும் இடமளிக்காது பாரபட்சமின்றி செயற்பட வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.



வடமாகாண உள்ளூராட்சி திணைக்கள அலுவலகத்தில் நேற்று(16) நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்நிகழ்ச்சியில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தினூடாக நடைமுறைப்படுத்தும் கொரோனா வைரஸ் ஒழிப்பு, கட்டுப்படுத்தல் பணிகளுக்காக 10 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள், பொருள்களையும் வடமாகாண ஆளுநர் கையளித்துள்ளார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர், வீதிகளில் நடமாடும் மாடுகள், நாய்கள் உள்ளிட்ட பிராணிகளைக் கட்டுப்படுத்த அதனூடாக இடம்பெறும் வீதி விபத்துகளை தவிர்க்க வேண்டுமெனவும், பெரும்பாலான வீதிகளில் இரு பக்கங்களிலும் குப்பைகள் நிறைந்து காணப்படுவதாகவும் அவற்றை அகற்ற வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

# ‘கொரோனா பரவலுக்கு மத்தியில் விருப்பு வாக்கைத் தேடும் பவித்ரா’

## ரணில் குற்றச்சாட்டு

உலக நாடுகள் பலவற்றில், சுகாதார அமைச்சர்கள் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டு வருவதால் அவர்களும் கொரோனா தொற்றுக்கு ஆளாகியுள்ளனர் என்று தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, எமது சுகாதார அமைச்சர், இரத்தினபுரியில் விருப்பு வாக்குகளைத் தேடிக்கொண்டிருக்கிறார் என்றும் குற்றஞ்சாட்டினார்.




ஹம்பாந்தோட்டையில், ஐக்கிய தேசிய கட்சியின் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துரைத்த அவர், கொரோனா வைரஸ் இன்று நாட்டைச் சுற்றி வலம் வருகின்றது. வைரஸ் பரவ ஆரம்பித்த காலத்திலிருந்து, முன்னெச்சரிக்கை செயற்பாடுகளை அரசாங்கம் மேற்கொள்ளவில்லை என்றார்.

இவ்வாறிருக்க, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, தற்போது தனது உரைகளுக்கு பதிலளிக்க ஆரம்பித்துள்ளார் என்று சாடிய ரணில் விக்கிரமசிங்க, கொரோனா ஒழிப்பு வேலைத்திட்டத்துக்கான பணம் நாட்டுக்குக் கிடைக்கவில்லை என்று அவர் கூறினாலும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, உலக வங்கியின் நிதியுதவி நாட்டுக்குக் கிடைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளார் என்றும் கூறினார்.

அத்துடன், உலக வங்கியின் நிதியுதவி மூன்று கட்டங்களாகக் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சர் கூறினாலும், உலக வங்கியின் நிதி உதவிகள் கட்டம் கட்டமாகக் கிடைக்காதென தெரிவித்த அவர், இதனால் பிரதமர், சுகாதார அமைச்சர் ஆகிய இருவரில், யார் பொய் சொல்கிறார்கள் என்பதை வெளிப்படையாகக் கூற வேண்டும் என்றார்.

சுகாதார அமைச்சர் இரத்தினபுரியில் விருப்பு வாக்குகளைத் தேடும்போது, நாட்டில் கொரோனா வைரஸ் பரவிக்கொண்டிருக்கிறது. இரத்தினபுரியின் வாக்குகளை ஒரே நாளில் சேகரித்துக் கொள்ள முடியும் என்றுரைத்த ரணில் விக்கிரமசிங்க, சுகாதார அமைச்சர், அமைச்சின் நிர்வாகப் பணிகளையே முன்னெடுக்க வேண்டியது அவசியமெனவும் தெரிவித்தார்.




கன்னியா வெந்நீரூற்று காணி

# எழுத்து மூலமான சமர்ப்பணங்களை செப். 15இல் முன்வைக்குமாறு உத்தரவு

■ வடமலை ராஜ்குமார்



திருகோணமலை - கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் காணி விவகாரம் தொடர்பான எழுத்து மூலமான சமர்ப்பணங்களை, செப்டெம்பர் 15ஆம் திகதியன்று மன்றில் முன்வைக்குமாறு உத்தரவிட்ட திருகோணமலை மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன், அன்றைய தினம் வரை வழக்கை ஒத்திவைத்தார்.

திருகோணமலை - கன்னியா வெந்நீரூற்றுப் பிள்ளையார் கோவில் காணி தொடர்பான வழக்கு, நேற்று (16) திருகோணமலை மாகாண மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே, மேற்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு விசாரணைகளின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துரைத்த கோவிலின் நம்பிக்கைப் பொறுப்பாளர் கோகிலரமணி அம்மா சார்பில் ஆஜராகியிருந்த சட்டத்தரணியும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், இது, தேசிய புராதன பொக்கிஷம் சம்பந்தப்பட்ட விடயம் என்பதால், மாகாண மேல் நீதிமன்றத்துக்குட்பட்ட நியாயாதிக்கம் இல்லை என்றும் கொழும்பில் உள்ள மேன்முறையீட்டு நீதிமன்றத்திலே இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்க வேண்டுமென்றும் வாதிட்டதாகத் தெரிவித்தார்.

மேல் நீதிமன்றத்துக்கு எதிராக எந்த முறையீடுகளும் அரச தரப்பு செய்திருக்கவில்லையெனத் தெரிவித்த அவர், ஏற்கெனவே அமலில் இருக்கும் உத்தரவை மாற்ற முடியாது என்பதே தன்னுடைய வாதமாக இருந்ததெனவும் கூறினார்.

எழுத்து மூல சமர்ப்பணங்களை நீதிமன்றம் ஏற்றதன் பின்னர், இந்த வழக்கின் தீர்ப்பு வழங்கப்படுமெனவும், சுமந்திரன் தெரிவித்தார்.

## 'விடாமுயற்சியுடன் விரும்பியதை செய்யுங்கள்'



கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறவிடாதீர்களெனத் தெரிவித்த ஹேமாஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி நிறுவனத்தின் பிரதிப் பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன், புதிய விடயங்களை மேற்கொள்ள ஆர்வமாக இருங்களெனவும் விடாமுயற்சியுடன் விரும்பியதைச் செய்யுங்களெனவும் கூறினார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், முதலில் ஒழுக்கமான நற்பண்புகள் நிறைந்த ஒரு மனிதராக வாழப் பழகுங்களெனவும் புத்தகக் கல்வி மட்டுமே உலகமல்லவெனவும், பல்துறைகளில் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ளுங்களெனவும் கூறினார்.

"கனவுகளைக் கொண்டிருங்கள், ஆனாலும், அந்தக் கனவுகளுக்கு உங்களை மட்டுப்படுத்திவிடாதீர்கள். கிடைக்கும் வாய்ப்புகளைத் தவறவிடாதீர்கள். புதிய விடயங்களை மேற்கொள்ள ஆர்வமாக இருங்கள். விடாமுயற்சியுடன் விரும்பியதைச் செய்யுங்கள். அப்போது வெற்றி நிச்சயம் கிடைக்கும்" எனவும், அவர் தெரிவித்தார்.

எதிர்பார்ப்புகளை கைவிட்டுவிடாதீர்களெனத் தெரிவித்த கஸ்தூரி செல்லராஜா வில்சன், உங்களால் கண்டிப்பாக முன்னேற முடியுமெனவும் கூறினார்.

தமது கடந்து வந்த வாழ்க்கைப் பயணம், அனுபவம், திட்டங்கள், எதிர்காலச் சந்ததியினருக்கு வழங்கும் அறிவுரை எனப் பல விடயங்களை, தமிழ்மிரர் வாணிபப் பகுதி நேர்காணலின் போது பகர்ந்து கொண்டார். அந்த நேர்காணலை, சனிக்கிழமை (18), தமிழ்மிரர் e-பத்திரிகையில் முழுமையாக வாசிக்க முடியும்.

கல்முனை தமிழ்ப் பிரதேச செயலக விவகாரம்; ஞானசார தேரரின்

# உறுதிமொழி

■ பாறுக் ஷிஹான்



இந்த ஆட்சியின் ஊடாக, கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தைப் பெற்றுத்தருவதாக உறுதியளித்த பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட ஞானசார தேரர், அவசரப்படாமல் எதிர்பார்த்து காத்திருக்குமாறும் கூறினார்.

பொது பலசேனா அமைப்பின் செயலாளர் கலகொட ஞானசார தேரர், நேற்று முன்தினம் (15) இரவு, அம்பாறை - பெரியநீலாவணைக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார். இதன்போது, அங்கு சென்ற தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினரும் கல்முனை உப தமிழ்ப் பிரதேச செயலகத்தைத் தரமுயர்த்தி தருமாறு உண்ணாவிரதம் இருந்தவருமான சந்திரசேகரம் ராஜன், "கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பில் கடந்த கால வாக்குறுதி என்னவானது?" என, ஞானசார தேரரிடம் வினவினார்.

அதற்கு பதிலளித்த போதே, ஞானசார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், பெரியநீலாவணை வீட்டுத்திட்டத்தில், சிங்களத் தாயார் ஒருவருக்கு ஏற்பட்ட சுகவீனத்தை அடுத்து, நலன் விசாரிப்பதற்காகவே, தேரர் இப்பகுதிக்கு வருகை தந்துள்ளதாக, பொது பலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட ஞானசார தேரருடன் வந்திருந்தவர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

சுற்றுலாத்துறையைக் கட்டியெழுப்புவதற்கு

# 'அரச வங்கிகளின் உதவிகளை பெற்றுக்கொள்ள நடவடிக்கை'

■ சிவாணி ஸ்ரீ



கொவிட் - 19 காரணமாக முடங்கியிருந்த சப்ரகமுவ மாகாணத்தின் சுற்றுலாத்துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, அரச வங்கிகளின் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

சப்ரகமுவ மாகாணத்தின் சுற்றுலாத் துறையை மேலும் அபிவிருத்திச் செய்வது தொடர்பில், பலாங்கொடை-பம்பஹின்ன விடுதியில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், சப்ரகமுவ மாகாணத்தின் இரத்தினபுரி, கேகாலை ஆகிய மாவட்டங்களில், உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாத்துறையினர்களுக்குச் சேவையைப் பெற்று கொடுப்பதற்கு, பல்துறையினர்களுக்கும் சொந்தமான 150 ஹோட்டல்கள் ஆயத்தமாக உள்ளனவென்றார்.

மேற்படி ஹோட்டல்கள், கொரோனா வைரஸ் தொற்று காரணமாக மூடப்பட்டுள்ள நிலையில், அவற்றை மீண்டும் திறப்பதற்கான நடவடிக்கைகளை, ஜனாதிபதி முன்னெடுத்துள்ளார்.

இதற்கமைய, நான்கு சதவீத வட்டிக்குக் கடனைப் பெற்றுக்கொடுப்பதற்கும் வரியைச் செலுத்துவதற்கும், ஏனைய தேவைகள் தொடர்பில் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும், ஆளுநர் தெரிவித்தார்.





## காளாஞ்சி கையளிப்பு

■ என்.ராஜ், எம்.றொசாந்த்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, நேற்று (16), கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதன்போது, வள்ளியம்மை திருக்கல்யாணப் படிப்புடன் பந்தற்கால் நாட்டும் நிகழ்வு நடைபெற்று, பாரம்பரியமுறைப்படி கொடிச்சீலை வழங்கும் மரபுடையவர்களுக்கான காளாஞ்சிகளும் பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும், மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கையளிக்கப்பட்டன.

கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழா, ஜூலை 25ஆம் திகதியன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 'அழிவுகளுக்கு நானும் காரணம்'



தமிழ் மக்கள் கடந்த காலங்களில் எதிர்கொண்ட அத்தனை அழிவுகளுக்கும், ஒருவகையில் தானும் காரணமெனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அந்த அழிவுகளில் இருந்து மக்களை மீட்டெடுத்து, சிறந்த வாழ்க்கைத் தரத்தை ஏற்படுத்தும் நோக்கிலேயே, தொடர்ந்தும் அரசியலில் ஈடுபட்டிருப்பதாகவும் கூறினார்.

வவுனியா - பூரசங்குளத்தில், நேற்று (16) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், தமிழ் மக்கள் சார்பான ஆயுதப் போராட்டத்தின் ஆரம்ப காலப் போராளிகளில் ஒருவன் என்ற வகையில், அத்தனை அழிவுகளுக்குமான தார்மீகப் பொறுப்பைத் தான் ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்தார்.

மக்கள் தன்னோடு கைகோர்த்து வருவார்களாயின், எதிர்கொள்கின்ற பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுக் கொடுத்து, அதன் ஊடாக சிறந்த வாழ்கைத் தரத்தை ஏற்படுத்திக் கொடுக்கவுள்ளதாகவும், கூறினார்.

## காட்டில் மாயமான மாணவர்கள் மீட்பு

■ செ.கீதாஞ்சன், சண்முகம் தவசீலன்

உடையார்க்கட்டு வனப்பகுதிக்குச் சென்ற காணாமல் போயிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் 9 பேரும், பொலிஸார், இராணுவத்தின் உதவியுடன் நேற்று முன்தினம் (15) மாலை மீட்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் (15) நண்பகல், இவர்கள், முத்தையன்கட்டு குளத்தைப் பார்வையிடுவதற்காக, இரண்டு குழுக்களாகப் பிரிந்து, உடையார்க்கட்டு காட்டுப் பகுதி ஊடாக நீண்டதூரம் பயணித்த நிலையில், வழி தவறி காணாமல் போயிருந்தனர்.

இது தொடர்பில், பொலிஸாருக்கும் இராணுவத்தினருக்கும் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, பொலிஸாரும் இராணுவத்தினரும், வனவள திணைக்கள அதிகாரிகள் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டனர்.

இதன் போது, ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியின் 9ஆம் கட்டை காட்டுப்பகுதியில் இருந்து ஒரு தொகுதியினரும் ஏனையவர்கள், கொய்யாக்குளம் பகுதியிலும் வைத்து கண்டுபிடிக்கப்பட்டனர்.

இந்த மாணவர்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவப் பீடத்தில் இறுதியாண்டில் கல்வி கற்பவர்களெனவும் இவர்கள், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களெனவும், விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

பெரும் வனப் பகுதிக்குள் சட்டவிரோதமாக நுழைவது தண்டனைக்குரிய குற்றமென, வனவளத் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளதுடன், படையினரின் படை முகாமிருக்கும் இடங்கள் ஊடாகக் கொய்யாக்குளம் வரை, சுமார் 15 கிலோமீற்றர் தூரம் வரை இவர்கள் சென்றுள்ளனரெனவும், படையினர் தெரிவித்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர், அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

## விபத்தில் வேட்பாளர் உயிரிழப்பு

■ எம்.றொசாந்த்

பூநகரி - சங்குப்பிட்டி பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில், படுகாயமடைந்து சிகிச்சைப் பெற்றுவந்த சுயேச்சைக் குழு வேட்பாளர் யோ.பியதர்ஷன், சிகிச்சை பலனின்றி, நேற்று முன்தினம் (15) இரவு உயிரிழந்துள்ளார்.

தேர்தல் நடவடிக்கைக்காக ஜூலை 06ஆம் திகதியன்று, சுயேச்சைக் குழு 03இன் தலைவரான சுந்தரலிங்கம் செல்வகுமார், வேட்பாளரான யோ.பியதர்ஷன் உள்ளிட்ட மூவர், கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்று, மீண்டும் கிளிநொச்சி நோக்கி ஓட்டோவில் சென்று கொண்டிருந்த போது, அவர்கள் பயணித்த ஓட்டோ, டிப்பர் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானமை குறிப்பிடத்தக்கது.

## 'இந்தியப் படகுகளை வரவிடாதீர்கள்'

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

இந்தியாவில் இருந்து எவரும் கடல் மார்க்கமாக இலங்கைக்கு வருவதற்கு அனுமதிக்கக் கூடாதெனவும் இந்திய டோலர் படகுகளை இலங்கைக் கடல் எல்லைக்குள் கூட வர அனுமதி வழங்க வேண்டாமெனவும், கடற்படை அதிகாரிகளிடம், மன்னார் மாவட்டச் செயலாளர் சி.ஏ.மோகன்றாஸ் அறிவுறுத்தல் வழங்கினார்.

மன்னார் மாவட்டச் செயலகத்தில், செவ்வாய்க்கிழமை (14) நடைபெற்ற அவசரக் கலந்துரையாடலின், போதே, அவர் இவ்வாறு அறிவுறுத்தல் வழங்கினார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், மன்னார் மாவட்டத்தில், 14 பேர் மாத்திரமே தனிமைப்படுத்தும் நிலையங்களில் உள்ளனரென்றார்.

மன்னார் மாவட்டப் பிராந்திய சுகாதாரச் சேவைகள் பணிப்பாளரின் அறிக்கையின் படி, இங்கு இதுவரை ஆபத்தான நிலைமை ஏற்படவில்லையென்றார்.

## யாழ்ப்பாணத்துக்கு ரணில் விஜயம்

■ என்.ராஜ்

முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, வியாழக்கிழமையன்று (23), யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இதன்போது, யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசிய கட்சி சார்பில் போட்டியிடும் விஜயகலா மகேஸ்வரனுக்கு ஆதரவாகப் பிரசாரத்தில் ஈடுபடவுள்ள அவர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உள்ள சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், மதகுருமார்கள், கல்வியாளர்களுடனான சந்திப்பையும் மேற்கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கிளினிக் வருவோருக்கு அசௌகரியம்

■ இரா.யோகேசன்

டிக்கோயா - கிளங்கன் ஆதார வைத்தியசாலையில், கிழமை நாள்களில் கிளினிக் வைத்தியப் பரிசோதனைக்கு வரும் நோயாளர்கள், பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக, பாதிக்கப்பட்டோர் தெரிவித்துள்ளனர்.

தற்போது நிலவி வரும் கொரோனா வைரஸ் தாக்கம், தங்களுடைய வைத்திய பரிசோதனைகளுக்குப் பாரிய பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்த நோயாளர்கள், அவ்வாறு தாம் வைத்திய பரிசோதனைக்கு வந்தாலும், கெடிபிடிகளால் உரிய முறையில் வைத்திய பரிசோதனைகளைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

இதுதவிர, வைத்தியசாலையின் சுற்றுப்புறத்தில் துர்நாற்றம் வீசுவதால், இப்பகுதியில் நீண்ட நேரம் இருக்க முடியாமல் இருப்பதாகவும், நோயாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## குடிநீர்ப் பிரச்சினைக்குத் தீர்வு

இரத்தினபுரி - கஹாவத்தை, நீலகாமம் முதலாம் பிரிவு தோட்ட மக்கள் எதிர்நோக்கி வந்த குடிநீர்ப் பிரச்சினைக்கு, உதவும் கரங்கள் அமைப்பின் மூலம் தீர்வு கிடைத்துள்ளது.

இதற்கமைய, கஹாவத்தை சிகரம் பவுண்டேஷனின் வேண்டுகோளுக்கமைய, 4 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில், குடிநீர் விநியோகச் செயற்றிட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் செயற்றிட்டம், நாளை (18) திறந்து வைக்கப்படவுள்ளது.

தடைசெய்யப்பட்ட கடற்றொழில் முறைகளை

## வடக்கிலும் தடை செய்யத் தீர்மானம்

வடபகுதி கடற்பரப்புகளில், தடைசெய்யப்பட்ட கடற்றொழில் முறைகளைக் கையாண்டு, தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடைசெய்வதற்கு அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தலைமையில், நேற்று முன்தினம் (15) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் இவ்விடயம் பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே, அமைச்சரவையால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதையடுத்து, இந்தச் சட்டவிரோத தொழில் முறைமைகளைக் கட்டுப்படுத்தவதற்கான நடவடிக்கைகள், நேற்று (16) முதல் நடைமுறைப்படுத்துமாறு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, துறைசார் தரப்பினருக்கும் பணிப்புரை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிறுமியை இழுத்துச்சென்ற முதலை

மீகலேவ பிரதேசத்தில், நேற்று முன்தினம் (15) மாலை, நீராடிக் கொண்டிருந்த மூன்றரை வயது சிறுமி ஒருவர் முதலை ஒன்றால் இழுத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில் உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்த சிறுமி, சியம்பலாங்கமுவ - லீகொல வெவ, உஸ்கல பிரதேசத்தைச் சேர்ந்தவரென, மீகலேவ பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனது தாயுடன் நீராடிக் கொண்டிருந்த போதே, அச்சிறுமியை முதலை இழுத்துச் சென்றுள்ளது.

இதையடுத்து, அங்குகூடிய பிரதேசவாசிகளும் மீகலேவ வனவிலங்கு அலுவலக அதிகாரிகளும் இணைந்து, சிறுமியை மீட்டு, தம்புத்தேகம வைத்தியசாலையில் அனுமதித்த போதும், அச்சிறுமி சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்துள்ளார்.

அரசியல் கைதிகள் விடயத்தில்


# ‘கூட்டமைப்பினர் அக்கறை காட்டவில்லை’

கடந்த நான்கரை வருடங்களாக நல்லாட்சி என்ற பெயரில் உருவான அரசாங்கத்துடன் இணக்க அரசியலைச் செய்துவந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான எந்தவிதமான பலமான நடவடிக்கைகளையும் எடுக்காமல் காலத்தைக் கடத்திவிட்டனர் என்று, வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

உடுத்துறை பகுதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்துரைத்துள்ள அவர், தற்போதைய தேர்தல் காலத்தில், ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதும் கண்துடைப்பு வேலைகளையே செய்து வருகின்றார்கள். இவர்கள் நினைத்திருந்தால், நாடாளுமன்றத்தில் இருந்து பேரம் பேசவேண்டிய நேரத்தில் பேரம் பேசி, எங்கள் அரசியல் கைதிகளை விடுவித்திருக்கலாம்” என்றார்.

அத்துடன், தற்போதும் கூட தொடர்ந்துவரும் அரசாங்கங்கள், தமிழ் அரசியல் கைதிகளைப் பணயக் கைதிகளாகவே வைத்துக்கொண்டு வருகின்றன என்றும் குற்றஞ்சாட்டிய சி.வி, சிங்களப் போர்க் குற்றவாளிகளைக் கைதில் இருந்து தப்பவைக்க, அவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் நடைபெறாதிருக்க, மேற்படி தமிழ் அரசியல் கைதிகளைப் பணயமாகப் பாவிக்கவே அவர்களைத்



தொடர்ந்தும் சிறையில் வாட வைத்திருக்கின்றார்கள். ஆகவே, நாம் தேர்ந்தெடுக்கப்பட்டால், சட்ட ரீதியாக கட்டமைப்புகளை உருவாக்கி, செய்யக்கூடிய எல்லா வழிமுறைகளையும் நாம் பரிசீலித்து நடவடிக்கைகளை மேற்கொள்வோம். அதேசமயம், ஜனாதிபதியுடன் இவர்களின் விடுதலை தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவோம்.

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் தெரிவு செய்யப்படும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஐ.நா, சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புகள், இந்திய அரசு ஆகியவற்றுடன் இது விடயத்தில் தொடர்ச்சியான கலந்துரையாடல்களை நடத்தி, அரசாங்கத்தின் மீது அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கு நடவடிக்கைகள் எடுப்பரென்றும் அவர் கூறினார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களைத் தேடும் வகையில், கடந்த 11 வருடங்களாக அவர்களின் உறவுகள் போராடி வருகின்றனர். அவர்களையும் உள்ளடக்கிப் போராட்டங்களை நிலத்திலும் புலத்திலும் விரிவுபடுத்தி போராட்ட வடிவங்களையும் விரிவுபடுத்தி செயற்படுவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக ஆய்வுகள்;

# ‘தவறுகள் ஏற்படுவது சகஜம் என்கிறார் பிரதமர்’

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் தவறிருப்பதாகச் சொல்லப்பட்ட விவகாரத்தின் உண்மைத் தன்மையைப் பொதுமக்கள் புரிந்துகொள்ள வேண்டும் என சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

பிசிஆர் பரிசோதனைக்காகச் சேகரிக்கப்படுகின்ற மாதிரிகளைக் கொண்டு செல்வது முதல், அதைப் பரிசோதனைக்கு உட்படுத்துவது வரை, பாரிய நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன. அந்த, மாதிரிகளைப் பரிசோதனைக்கு உட்படுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் சோதனைக் குழாய்களின் தடிப்பமும், இப்பரிசோதனைகளில் தாக்கம் செலுத்துகின்றன. ஆகையால்தான், பரிசோதனை முடிவுகளில் தவறுகள் இடம்பெற்றிருக்கின்றன என்று, ஊடகப் பிரதானிகளுடன் அலரி மாளிகையில் நேற்று (16) இடம்பெற்ற சந்திப்பின் போது, அவர் கூறினார்.

இதன்போது குறுக்கிட்ட பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ, “தொற்றுக்கு உள்ளானவர்களின் மாதிரிகள், பல மட்டங்களில் பரிசோதிக்கப்படுகின்றன. இவற்றில் நான்கு முடிவுகள் ‘இல்லை’ என்று சொல்லும்போது, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முடிவுகள் மாத்திரம் ‘ஆம்’ என்று சொல்வதே இக்குழப்பத்துக்குக் காரணம். ஆகையால்தான், அனைவரும் ஒன்றுகூடிக் கலந்தாலோசித்து, இறுதி முடிவுகள் எடுக்க நேர்ந்திருக்கின்றன. சில சமயங்களில், இவ்வாறான தவறுகள் ஏற்படுவது சகஜம். ஆகையால்தான் பல மட்டங்களில் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன” என்றார்.

# இதுவரை 29,935 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

இலங்கையில் கொவிட் 19 பரவல் ஆரம்பமானது முதல் இதுவரை, 29,935 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று, இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இவர்களில் 22,650 பேர் தனிமைப்படுத்தலை நிறைவுசெய்துகொண்டு வீடு திரும்பியுள்ளனர் என்று, இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சந்தன விக்ரமத்ன தெரிவித்தார்.

இதேவேளை, முப்படைகளால் நடத்திச் செல்லப்படும் தனிமைப்படுத்தல் நிலையங்களில், 7,285 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் நேற்றைய (17) தினம் 106 பேர் தனிமைப்படுத்தலை நிறைவு செய்துகொண்டு வீடு திரும்பியுள்ளனர் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இலங்கையில் கொவிட் 19 பரவல் ஆரம்பமானது முதல் இதுவரை, 130,000 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று, சுகாதாரச் சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தினூடாக 130,390 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் நேற்று மட்டும் 2,470 பிசிஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அதிக கட்டணம் செலுத்தியிருந்தால்

# ‘அடுத்த மின் பட்டியலில் ஈடுசெய்யப்படும்’



மக்களுக்கு மின்சாரப் பட்டியலில் நிவாரணம் வழங்குவதற்கு, அரசாங்கம் இதுவரையில் நடவடிக்கை எடுத்துள்ளதுடன், அதற்காக, மின்சார கட்டணத்தின் ஒரு பகுதியை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளதென, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனகட்சியின் தலைவர் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்தார்.

யட்டியன்தொட பிரதேசத்தில், நேற்று (16) நடைபெற்ற சந்திப்பொன்றின் போதே, பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், “மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கான பட்டியல்களின் தொகை, பெப்ரவரி மாத பட்டியலின் கட்டணத் தொகையை விட அதிகமாயின், அந்தப் பாவனையாளர்களுக்கு, பெப்ரவரி மாதப் பட்டியலின் பெறுமதியை, குறித்த மூன்று மாதங்களுக்கு மாற்றீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது” என்றார்.

இதுவரையில், மார்ச், ஏப்ரல், மே மாதங்களுக்கான மின் கட்டணங்களைச் செலுத்தியுள்ள பாவனையாளர்கள், மேலதிகமாகப் பணம் செலுத்தியிருந்தால், அத்தொகை எதிர்வரும் மின் பட்டியல்களில் ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பிரதமர் தெரிவித்தார்.

உரிய வரவு - செலவுத் திட்டமொன்று இன்றி, சாதாரண அமைச்சரவையொன்றை நடத்திக் கொண்டு, கடந்த மூன்று மாதங்களில் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தி, அரசாங்கம் பாரிய வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்திருந்த போதிலும், கடந்த மூன்று மாதக் காலப்பகுதியில், அரசாங்கம் எவ்வித வேலையையும் செய்யவில்லை எனச் சில அரசியல் கட்சிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு, தேர்தலின்போது மக்கள் உரிய பதில் வழங்குவார்கள் என்றும், குறிப்பிட்டார்.

2009ஆம் ஆண்டில் யுத்தம் நிறைவடைந்த நாள் முதல், மக்களுக்குச் சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்து, நாட்டை அபிவிருத்திச் செய்து வெற்றிகரமாக முன்னோக்கி வந்த பயணம், 2015ஆம் ஆண்டு நிறுத்தப்பட்டதுடன், பின்னோக்கிச் சென்ற நாட்டின் எதிர்காலப் பயணத்தை, புதிய அரசாங்கமொன்றின் ஊடாக வெற்றிகரமாக ஆரம்பிக்கப் போவதாகவும், பிரதமர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

# ‘மது, புகைப்பொருள்கள் விற்பனையை நிறுத்தவும்’



கொரோனா வைரஸ் வியாபிப்பதற்கு, புகைப்பொருள்கள், மதுப்பாவனை பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றதெனத் தெரிவித்துள்ள இலங்கை புகைப்பொருள் மற்றும் மதுபானங்கள் தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்‌ஷ, அவ்விரு பொருள்களின் விற்பனைகளை நிறுத்தவேண்டுமெனக் கோரியுள்ளார்.

“மதுச்சாலைகளை இழுத்து மூடவேண்டும். புகைப்பொருள்களுக்கு தடை விதிக்கப்பட வேண்டும்” எனக் கோரியுள்ளார்.

தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் இருக்கும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களிடமிருந்து இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதெனத் தெரிவித்துள்ள சமாதி ராஜபக்‌ஷ,

“ஆபத்தான மருந்துகளைப் பயன்படுத்தல், போதைப்பொருள், புகைப்பொருள்கள் ஆகியவற்றை பயன்படுத்துவதால், ஏற்படும் மனச்சோர்வு கொரோனா வைரஸ் பரவுவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது” என்றார்.

ஒரேயொரு புகைப்பொருளை, அறுவர் பயன்படுத்தியதால், கொரோனா வைரஸின் முதலாவது அலை பெரும் வீச்சில் வியாபித்தது எனத் தெரிவித்த அவர், கொரோனா வைரஸை, முழுமையாகக் கட்டுப்படுத்தும் வரையிலும், புகைப்பொருள்களுக்குத் தடை விதிக்கவேண்டும் என்றார்.

# 17 கைக்குண்டுகளுடன் இரும்புப் பெட்டி மீட்பு

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - கொழும்புத்துறையிலுள்ள வீடொன்றிலிருந்து, 17 கைக்குண்டுகள் அடங்கிய இருப்புப் பெட்டியொன்றை, யாழ்ப்பாணம் பொலிஸார், நேற்று (16) கைப்பற்றியுள்ளனர்.

மேற்படி வீட்டின் வளாகத்தைச் சுத்தம் செய்தபோது, வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இரும்புப் பெட்டியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பெட்டிக்குள் கைக்குண்டுகள் இருப்பதைக் கண்ட வீட்டு உரிமையாளர், அது தொடர்பில் உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், விசாரணைகளை முன்னெடுத்தனர்.

கைக்குண்டுகளை

**“ வீட்டின் வளாகத்தைச் சுத்தம் செய்தபோது, வளாகத்தில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் இரும்புப் பெட்டியொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பெட்டிக்குள் கைக்குண்டுகள் இருப்பதைக் கண்ட வீட்டு உரிமையாளர், உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளார்**

அவ்விடத்திலுருந்து அப்புறப்படுத்துவதற்கு, யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தின் அனுமதியை, பொலிஸார் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில், நீதிமன்றின் அனுமதியுடன், சிறப்பு அதிரடிப் படையினரின் உதவியுடன், நேற்று (16) மாலை பெட்டியை அங்கிருந்து அகற்றியதுடன், அதற்குள்ளிருந்த 17 கைக்குண்டுகளையும் செயலிழக்கச் செய்தனர்.

# கொழும்பில் 10 மணித்தியால நீர்வெட்டு

கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் மேலாண்மை மேம்பாட்டு முதலீட்டுத் திட்டத்தின் கீழ் திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக, கொழும்பின் பல பகுதிகளில், நாளைய தினம் (18), 10 மணித்தியால நீர்வெட்டு அமல்படுத்தப்படவுள்ளதாக, தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

கொழும்பு 13, 14, 15 ஆகிய பகுதிகளிலேயே, நாளை (18) இரவு 8 மணிமுதல் ஞாயிற்றுக்கிழமை



காலை 6 மணிவரை நீர்வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது.

# 28 வருடங்களில் 39,934 வீடுகள்

க.ஆ.கோகிலவாணி



பெருந்தோட்டப் பகுதிகளில் 1992ஆம் ஆண்டு முதல் இதுவரையான 28 வருடங்களில், 39,934 வீடுகளே நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்று, மனித அபிவிருத்தி நிதியத்தின் முன்னாள் தலைவரும் ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட வேட்பாளருமான வ.புத்திரசிகமணி தெரிவித்தார்.

தமிழ்மிரருக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது மேலும் தெரிவித்த அவர், பெருந்தோட்டப் பகுதிகளில், நோர்வே அரசாங்கமும் டச்சு அரசாங்கமும் இணைந்து 14,000 வீடுகளை நிர்மாணித்துள்ளன என்றும் மலையகத்தில் இதுவரை கட்டப்பட்ட வீடுகளில், ஆகக் கூடுதலான வீடுகளை நோர்வே-டச்சு அரசாங்கமே நிர்மாணித்துள்ளன என்றும் தெரிவித்தார்.

“ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், 1,356 வீடுகளும் சமூக நலத்திட்டத்தினூடாக 3,900 வீடுகளும், ‘மாடி லயன்’ திட்டத்தின் கீழ் 735 வீடுகளும் அமைச்சினூடாக 4,021 வீடுகளும் புதிய வாழ்க்கை வீட்டுத்திட்டத்தின் கீழ் 1,132 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இவ்வீடுகள் 2018 ஆம் ஆண்டே முழுமைப்படுத்தப்பட்டன” என்றார்.

அத்துடன் வேல்ட்விஷன் உள்ளிட்ட அரச சார்பற்ற நிறுவனங்கள் பல இணைந்து 72 வீடுகளை நிர்மாணித்துள்ளன என்றும் அமரர் பெ.சந்திரசேகரனின் காலத்தில் அமல்படுத்தப்பட்ட சுயவீட்டுத் திட்டத்தின் கீழ் 5,281 வீடுகளும், நூறு நாள் வேலைத்திட்டத்தில் 338 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

‘கிறீன் கோல்ட் அவுசிங்’ திட்டத்தின் கீழ், 1,069 வீடுகளும் டவுன்சிப் வேலைத்திட்டத்தில் 113 வீடுகளும், இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் 3,000 வீடுகளும், இதைத்தவிர இலங்கை அரசாங்கத்தால் 4,000 வீடுகளும் கட்டப்பட்டுள்ளன. இதைத்தவிர 1,200 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

எனவே, பெருந்தோட்டத் பகுதிகளில் 28 வருடங்களில் 39,934 வீடுகளே நிர்மாணிக்கப்பட்டுள்ளன என்றுத் தெரிவித்த அவர் பிரசார மேடைகளில் கூறப்படுவதைப் போன்று 50,000 வீடுகளோ 60,000 வீடுகளோ கட்டப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

“மலையக மக்கள் முன்னணியினர் 25,000 வீடுகளைக் கட்டியதாக பிரசார மேடைகளில் கூறித்திறிகின்றனர். அத்துடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் 50,000 வீடுகளைக் கட்டியதாகக் கூறுகிறது. திகாம்பரம் 10,000 வீடுகளைக் கட்டியாதாகக் கூறினார். இவர்கள் அனைவரும் கூறுவதைப் பார்த்தால், மலையகத்தில் 85,000 வீடுகள் கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், 1992 முதல் மலையகத்தில், 39,934 வீடுகளே கட்டப்பட்டுள்ளன. அத்துடன் மனித அபிவிருத்தி நிதியத்தின் தலைவராக செயற்பட்ட காலத்தில், 7,000 வீடுகளே நிர்மாணிக்கப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

# கருத்துக் கணிப்பில் செந்தில் முன்னிலை

க.ஆ.கோகிலவாணி

இம்முறைப் பொதுத் தேர்தலில், பதுளை மாவட்டத்தில் போட்டியிடும் ஐந்து தமிழ் வேட்பாளர்களில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன சார்பில் போட்டியிடும் செந்தில் தொண்டமான், முன்னிலையில் உள்ளார் என்று, கருத்துக் கணிப்புகளில் தெரியவந்துள்ளது.

சமூக அபிவிருத்தி மன்றம், ஊவா மாகாணத் தமிழ்ப் பட்டதாரிகள் ஒன்றியம், தமிழ் யூனியன், நாளைய மலையகம் ஆகிய அமைப்புகள் இணைந்து, பதுளை மாவட்டத்திலுள்ள பெருந்தோட்டப் பகுதிகளில் மேற்கொண்ட கருத்துக் கணிப்புகளிலேயே, செந்தில் தொண்டமான் முன்னிலையில் உள்ளார் என்று அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, சமூக அபிவிருத்தி மன்றம், கந்தேகெதரை நகரத்தை அடிப்படையாகக் கொண்ட 15 தோட்டங்களில் மேற்கொண்ட ஆய்வில், செந்தில் தொண்டமான் 81 சதவீதமளவில் முன்னிலையிலுள்ளார் என்று தெரிவித்துள்ளது.

மேலும், ஊவா மாகாணத் தமிழ்ப் பட்டதாரிகள் ஒன்றியம், ஒன்றியத்திலுள்ள 400 உத்தியோகத்தர்களிடம் மேற்கொண்ட கருத்துக்



கணிப்பிலும், அவர் 81 சதவீதம் முன்னிலையிலுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

தமிழ் யூனியன் அமைப்பானது, தபால்மூல வாக்களிப்பில் ஈடுபட்ட 1,476 பேரிடம் மேற்கொண்ட ஆய்வில் 82 சதவீதத்தில் செந்தில் முன்னிலையிலுள்ளார்.

தபால்மூல வாக்களிப்பு தொடர்பில், நாளைய மலையகம் மேற்கொண்ட ஆய்வில், செந்தில் தொண்டமான் 79 சதவீதமும் தொலைபேசிச் சின்னம் 12 சதவீதமும், யானைச் சின்னம் 6 சதவீதமும், மக்கள் விடுதலை முன்னணி 2 சதவீதமும், சுயேச்சை குழுக்கள் 1 சதவீதமும் பெற்றுள்ளன.

மலையக சகவாழ்வு சங்கம் மேற்கொண்ட ஆய்வில், 81.6 சதவீதமளவில் செந்தில் தொண்டமான் முன்னிலையிலுள்ளார்.

# தேர்தலைப் பிற்போடுவது சாத்தியமில்லை...

எப்பாடுபட்டேனும் பொதுத் தேர்தலைக் குறித்த திகதியில் நடத்திவிட வேண்டும் என்ற நிலையிலேயே அரசாங்கம் இருப்பதாக உணர முடிகிறது. ஊடகப் பிரதானிகளை நேற்றுக் காலை, அலரிமாளிகைக்கு அழைத்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, கொரோனா வைரஸ் பரவல் பற்றிய வதந்திகளைப் பரப்ப வேண்டாம் எனவும், விருப்பு வாக்குகளைப் பெறுவதற்காக வேட்பாளர்கள் விசமத்தனமாக நடந்துகொள்வதாகவும் ஆதங்கப்பட்டார்.

இவ்விடயத்திலிருந்து தெளிவாக ஒன்றைப் புரிந்துகொள்ள முடிகிறது. தேர்தல் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் இருக்கின்றபோதிலும், அந்த அதிகாரத்தையும் தாண்டிய அவதானம் ஒன்றை அரசாங்கம் தெளிவாக வைத்திருக்கின்றது. குறித்த திகதியில் தேர்தலை நடத்தி முடிக்காவிட்டால், பாரியளவான பிரச்சினைகளுக்கு அரசாங்கம் முகங்கொடுக்க நேரிடலாம். குறிப்பாக, பொருளாதாரப் பிரச்சினை, வேலை வாய்ப்பின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகள் உருவெடுக்கக் கூடும்.

இவற்றையெல்லாம் சமாளிக்க வேண்டுமென்றால், பொதுத் தேர்தலை நடத்தி முடித்தாக வேண்டும். அதனால்தான், பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய சுகாதார வழிகாட்டல்கள் உள்ளடங்கிய வர்த்தமானி அறிவித்தல் இன்றோ அல்லது நாளையோ வெளியிடப்படும் என, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்திருக்கிறார். இதேவேளை, இலங்கையைவிட 66 மடங்கு சிறிய சிங்கப்பூரில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனா வைரஸ் தாக்கத்துக்குள்ளாகிய போதிலும் அங்கு தேர்தல் நடைபெற்றிருப்பதாகவும் அமைச்சர் பந்துல சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இவ்விடத்தில்தான் மக்கள் தெளிவாக இருக்க வேண்டும். கொரோனா வைரஸ் பரவலென்பது, ஒப்பீட்டளவில் நமது நாட்டில் கட்டுப்பாட்டுக்குள்தான் இருக்கிறது. இருப்பினும், வைரஸ் பரவலை முற்றாகத் தவிர்க்க முடியவில்லை. உலகளாவிய ரீதியிலும் அது சாத்தியப்படவில்லை. கொரோனாவுடன் வாழப் பழகிவிடவேண்டும் என்று நகைச்சுவையாகக் கூறினாலும் அதுதான் யதார்த்தமாகிவிட்டது.

எனவேதான், இக்கட்டான சூழ்நிலையை எமக்குச் சாதகமாக எப்படி மாற்றிக்கொள்வது என்பதுபற்றிய தெளிவை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வதுதான் சிறந்தது. எம்மை மற்றையவர்கள் பாதுகாப்பார்கள் என்ற காலம் மலையேறிவிட்டது. எம்மீது நாமே நம்பிக்கை வைக்க வேண்டும். அந்த நம்பிக்கையூடாகவே எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப முடியும்.

தேர்தல் என்பதும் அத்தியாவசியமானதுதான். வாக்கு வேட்டைகளும், பிரசாரங்களும் இக்காலப்பகுதியில் ஓயப்போவதில்லை. மீதமிருக்கும் சொற்ப நாள்களுக்குள் உங்களைத் தெளிவுபடுத்திக்கொண்டு, நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கும் தேர்தலில் வாக்களிப்பதையும் கட்டாயப்படுத்திக்கொள்ளுங்கள்.


தமிழ்Mirror
www.tamilmirror.lk
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk











## வாழ்வியல் தரிசனம்

உயிருக்குள் மனசும் இணைந்திருக்கிறது. மனம் சங்கடப்பட்டால் ஜீவன் துடிக்கிறது.

எனவே, இவை இணைந்து சாத்வீகமாகச் செயற்பட்டால், அதுவே இனிமை. உயிர், பாவம் செய்வதில்லை. ஆனால், அறிவுக்குள் புகுந்து கொள்ளும் துர்க்குணங்கள், நெஞ்சத்தை சிதைக்க வல்லன. ஆரம்பத்தில் தாங்கள் செய்வதே சரி என, மனம் சஞ்சலப்பட்டால், நடப்பது விபரீதமாகி விடுகின்றது.

மனிதனுக்கு ஆத்மா இருக்கும் வரை அறிவு, சிந்தனை, கோபதாபங்கள், காதல் எல்லாமே கலந்து இருக்கும். ஆனால், இவற்றைப் பகுத்து ஆராய்ந்து நல்லதை மட்டும், தெரிவு செய்வது மனிதனின் திறன் சம்பந்தப்பட்டதாகும்.

நாங்கள் எமது உடல் எண்ணங்களைச் சந்தோஷமாக வைத்திருக்க வேண்டும். தேக ஆரோக்கியம் மனம் சம்பந்தப்பட்டதுமாகும். ஆரோக்கியம் குன்றினால் நெஞ்சமும் மாசு அடையலாம். தெளிந்த உள்ளம் சொர்க்கத்தின் உறைவிடம்.

–பருத்தியூர் பாலெ. வயிரவநாதன்

# வெற்றித் திமிர் குப்புறக் கவிழ்க்குமா?

**கே. சஞ்சயன்**

ராஜபக்ஷ சகோதரர்கள் தலைமை தாங்கும் அரசாங்கம், தோல்விகள் அல்லது அனுபவங்களில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளவில்லை என்பது, பொதுவான குற்றச்சாட்டாக இருந்து வருகிறது.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளைத் தோற்கடித்ததன் மூலம் மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் உச்சக்கட்ட வெற்றியைப் பெற்றிருந்தது.

இன்றும் சிங்கள மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தப் பயன்படுத்தும், 'விடுதலைப் புலிகளை' தோற்கடித்து பெறப்பட்ட வெற்றி அது. அந்த வெற்றியைக் கொண்டாடாத சிங்களவர்கள் யாருமே இல்லை எனலாம்.

அந்தளவுக்கு, உச்ச வெற்றியைத் தொட்ட மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம், அடுத்த ஆறு ஆண்டுகளுக்குள் சரிந்து வீழ்ந்தது.

ஓர் இரும்புக் கோட்டையைக் கட்டுவதற்குச் சாதகமான போர் வெற்றியை, மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தவறாகக் கையாண்டதால், அது வெறும் மணல்கோட்டையாக மாறிப்போனது.

அந்தத் தவறுகளால், மிகக்குறுகிய காலத்துக்குள்ளாகவே சிங்கள மக்களால் அந்த உச்சக்கட்ட போர் வெற்றியில், ராஜபக்ஷவினருக்கு இருந்த பங்கு மறக்கப்பட்டது. அவர்கள் மாற்றத்தை எதிர்பார்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

உச்ச வெற்றியின் விளிம்பில் நின்று ஆட்டம் போட்ட ராஜபக்ஷவினரை, கீழே வீழ்த்தியது 2015 ஜனாதிபதித் தேர்தல்.

அதற்குப் பின்னர், தமது தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொண்டதாகக் கூறிக் கொண்டனர். அதற்காக பசில் ராஜபக்ஷ போன்றவர்கள் மன்னிப்பும் கோரினார்கள்.

எனினும், பாடம் கற்றுக் கொண்டதாகக் கூறியதை அவர்கள் நிரூபிக்கவில்லை.

மிகப்பெரிய ஒரு போர் வெற்றிக்குப் பின்னர் கூட, ராஜபக்ஷ அரசாங்கம், தள்ளி வீழ்த்தப்பட்ட வரலாறு கடந்து போய், அதிக காலம் ஆகவில்லை. வெறும் ஐந்து ஆண்டுகள் தான் சென்றிருக்கின்றன.

மீண்டும் அவ்வாறானதொரு வீழ்ச்சியை, அவர்கள் சந்திக்கப் போகிறார்களா என்ற கேள்வி, அண்மைய நாள்களில் எழுந்திருக்கிறது. காரணம், கொரோனா வைரஸுக்கு எதிரான போரில், அவர்களின் வெற்றி கேள்விக்குறியாக மாறியிருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று, சீனாவில் பரவத் தொடங்கிய போது, தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில் கோரிக்கை விடுத்தன.

ஆனால், கொரோனா வைரஸ் தொற்று வாசல்படிக்கு வந்த பின்னர் தான், அரசாங்கம் விழித்துக் கொண்டது; ஊரடங்கை அமல்படுத்தி, நாட்டை முடக்கியது.

கிட்டத்தட்ட மூன்று மாதகங்களாக நடைமுறையில் இருந்து ஊரடங்கின் மூலம், தொற்றுப் பரவல் கணிசமாகக் கட்டுப்படுத்தப்பட்டது.

கடும் விமர்சனங்கள, எதிர்ப்புகளுக்கு மத்தியில் இராணுவத்தினரைப் பணியில் ஈடுபடுத்தி, கொரோனா வைரஸை வென்று விட்டதாக அரசாங்கம் வெற்றிப் பிரகடனமும் செய்தது.

சமூகத்தில் இருந்து தொற்று முற்றுமுழுதாகவே அகற்றப்பட்டு விட்டதாகக் கருதப்பட்ட சூழ்நிலையில் தான், மீண்டும் ஓர் அலை தோன்றியிருக்கிறது.

கந்தகாடு புனர்வாழ்வு முகாமில், இருந்து தொற்றாளர் ஒருவர், வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்ற பின்னர் தான், அது அடையாளம் காணப்பட்டது.

அதற்குப் பின்னர், எங்கிருந்து தொற்றியது என்று அதன் வேரைத் தேடியபோது தான், இந்தத் தொற்று புனர்வாழ்வு முகாமுக்குள் மட்டுமல்லாது, வெளியேயும் பரவியிருக்கிறது என்று தெரியவந்தது.

கொரோனா வைரஸின் முதலாவது அலையில், அதிகம் சிக்கிக் கொண்டது கடற்படை தான்.

கடற்படையினருக்குக் கூட, இந்தத் தொற்று ஜா -எல, சுதுவெல்ல பகுதியில் போதைப்பொருள் பாவனையாளர்களைச் சுற்றிவளைத்த போது தான், பரவ ஆரம்பித்தது.

கிட்டத்தட்ட 1,000 வரையான கடற்படையினர் தொற்றுக்குள்ளாகினர்.

> **முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியாது. அதுபோலத் தான், கொரோனா வைரஸ் பரவல் பற்றிய தகவல்களை மறைத்து, தேர்தலை நடத்தி விட முயன்றாலும், அது அரசாங்கத்துக்கு ஆபத்தாகவே அமையும்**

அவர்களில் பெரும்பாலானவர்கள் குணமடைந்து விட்டாலும், தனிமைப்படுத்தல் முகாம்களில் இருந்து இன்னமும் முழுமையாகக் கடற்படையினரின் தொற்று அகற்றப்படவில்லை.

வெலிசர கடற்படை முகாமில் பரவிய தொற்று, சுகாதார மற்றும் பாதுகாப்பு அதிகாரிகளைப் படாதபாடு படுத்தி விட்டது.

மீண்டும், அதே போதைப்பொருள் பயன்பாட்டாளர்களில் இருந்து தொற்றுக் கிளம்பியிருக்கிறது.

போதைப்பொருள் மறுவாழ்வு நிலையத்தில் தோன்றியிருக்கின்ற தொற்று, அந்த மய்யத்தை நிர்வகிக்கும் இராணுவ அதிகாரிகள் மூலமாக வெளியிலும் பரவியிருக்கிறது.

முதல் அலையில் சிக்கியது கடற்படை. இரண்டாவது அலைக்குள் மாட்டிக் கொண்டிருப்பது இராணுவம்.

இந்த இரண்டாவது அலை தொடர்பான செய்திகளை அரசாங்கமும் சுகாதார அதிகாரிகளும் மறைக்கிறார்கள் என்பது எதிர்க்கட்சியினரின் குற்றச்சாட்டு ஆகும்.

அவ்வாறு எதையும் மறைக்கவில்லை என்று சுகாதார அதிகாரிகளும் அரசாங்கமும் கூறுகின்ற போதும், அதனை முழுமையாக நம்புகின்ற நிலையில் நாட்டு மக்கள் இல்லை.

முதலாவது அலை பற்றிய தகவல்கள் மறைக்கப்பட்டதாக அதிகளவில் நம்பிய மக்கள், இப்போதைய சூழ்நிலையில் இன்னும் கூடுதலாக நம்ப வேண்டிய நிலையில் இருக்கிறார்கள்.

ஏனென்றால், இன்னும் சுமார் இரண்டு வாரங்களில் தேர்தல் நடக்கப் போகிறது.

தேர்தலில் குழப்பம் வராதபடி பார்த்துக் கொள்வதற்காக, கொரோனா வைரஸின் இரண்டாவது அலை பற்றிய தகவல்களை அரசாங்கம் மறைக்கிறது என்று சாதாரண மக்கள் நம்புகிறார்கள.

சஜித் பிரேமதாஸ, ரணில் விக்கிரமசிங்க போன்ற எதிர்க்கட்சித் தலைவர்கள், தேர்தலை உடனடியாகப் பிற்போட வேண்டும் என்று கோரினாலும், அதனை அரசாங்கம் ஏற்கத் தயாராக இல்லை.

ஏனென்றால், எப்படியாவது தேர்தலை நடத்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று, ஆட்சியைப் பலப்படுத்தி விட வேண்டும் என்பதிலேயே, அரசாங்கம் குறியாக இருக்கிறது,

எனவே, தேர்தல் பிற்போடப்படும் நிலை ஏற்பட்டால், அது அரசாங்கத்துக்குப் பாதகமானதாக மாறும் என்ற அச்சம் இருக்கிறது.

அதைவிட கடந்த 7 மாதகால ஆட்சியே ஆளும்கட்சிக்குப் பாதிப்பைத் தான் தந்திருக்கிறது. மக்கள் மத்தியில் அதன் கவர்ச்சி குறைந்து விட்டது; சலிப்பும் வந்து விட்டது. எனவே, தேர்தல் மேலும் தள்ளிப் போனால், அரசாங்கம் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்காமல் போகலாம். எனவே தான், தேர்தலுக்கு அவசரப்படுகிறது ஆளும்கட்சி.

இந்த அவசரமும், தேர்தல் வெற்றிக்காக அரசாங்கம் கையாளும் அணுகுமுறைகளும் தான், ராஜபக்ஷவினரின், அடுத்த சரிவுக்குக் காரணமாகி விடுமோ என்ற சந்தேகத்தை தோற்றுவித்திருக்கிறது.

இரண்டாவது அலை தோன்றினால், அதற்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு என்று எதிர்க்கட்சிகள் மாத்திரம் குற்றம்சாட்டவில்லை.

சுகாதார அமைச்சு முறைப்படி நடந்து கொள்ளவில்லை என்று, அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கமும் கூறுகிறது.

தேர்தலுக்கு அவசரப்படும் அரசாங்கம், தேர்தலில் கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார வழிமுறைகள் குறித்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடாமல் இழுத்தடித்து வருகிறது.

இதனால் பிரசாரங்களின் போது வேட்பாளர்களும் வாக்காளர்களும் தொற்றுக்குள்ளாகும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானியை வெளியிடுமாறு 5, 6 தடவைகள் கடிதம் எழுதி விட்டதாக தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய கூறியிருக்கிறார்.

வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டால் தான், அதனை மீறுவோர் மீது நடவடிக்கை எடுக்க முடியும் என்றும், அதில் தமக்கு அதிகாரங்கள் தர வேண்டும் என்றும் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கோருகிறார்கள்.

> **தேர்தல் மேலும் தள்ளிப் போனால், அரசாங்கம் எதிர்பார்க்கும் வெற்றி கிடைக்காமல் போகலாம். எனவே தான், தேர்தலுக்கு அவசரப்படுகிறது ஆளும்கட்சி**

ஆனால் தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக, வழிகாட்டு முறைகள் அதற்குத் தடையாக இருக்கலாம் என்பதால், சுகாதார அமைச்சர் அதனை இழுத்தடித்து வருகிறார்.

சட்டமா அதிபரின் அனுமதி கிடைத்துப் பல வாரங்களாகியும் அரசாங்கம் வர்த்தமானியை வெளியிடாமல் இழுத்தடிப்பது சுகாதாரத் துறையினரையும், தேர்தல் ஆணைக்குழுவையும் விசனமடையச் செய்திருக்கிறது.

இவ்வாறான நிலையில், கந்தகாடு தொற்று மய்யத்தில் இருந்து தேர்தல் பிரசாரங்களுக்குப் பரவினாலும் சரி, இரண்டாவது அலை தோன்றினாலும் சரி, அது அரசாங்கத்துக்கே சரிவை ஏற்படுத்தும்.

எனவே தான், அரசாங்கம் தற்போதைய தொற்றுச் சூழலை மறைக்கப் பார்க்கிறது என்ற குற்றச்சாட்டுகள் எழுகின்றன.

கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தோன்றினாலும் அதனை அரசாங்கம் இப்போதைக்கு அறிவிக்காது; ஆபத்தை மறைக்கவே முனையும்.

தொற்றுத் தொடர்பான தகவல்களை அரசாங்கம் மறைக்க மறைக்க, அது, எதிர்விளைவுகளைத் தான் ஏற்படுத்தும்.

முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைக்க முடியாது. அதுபோலத் தான், கொரோனா வைரஸ் பரவல் பற்றிய தகவல்களை மறைத்து, தேர்தலை நடத்தி விட முயன்றாலும், அது அரசாங்கத்துக்கு ஆபத்தாகவே அமையும்.

புலிகளை வெற்றி கொண்ட திமிர், எவ்வாறு 2015 தோல்விக்கு காரணமாகியதோ, அதுபோலவே, கொரோனா வைரஸின் முதல் அலையை வெற்றி கொண்ட திமிரும், குப்புறக் கவிழ்த்து விடும்.

## கடிதங்கள்

### மல்வத்தை ஆரம்ப வைத்தியப் பிரிவு தரமுயர்த்தப்படாதது ஏன்?

அம்பாறை மாவட்டத்தில் மிகவும் பழைமை வாய்ந்த கிராமங்களில் ஒன்றான மல்வத்தை கிராமம், காலம் காலமாக, எல்லா வகையிலும் கவனிப்பார் அற்ற கிராமமாகவே காணப்படுகின்றது.

மல்வத்தைக் கிராமத்தைச் சூழ, 10 மேற்பட்ட கிராமங்கள் காணப்படுகின்றன. இங்கு மூவின மக்களும் எந்தவிதமான பாகுபாடும் இல்லாமல் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தக் கிராம மக்களின் வைத்தியத் தேவையைப் பூர்த்திசெய்ய ஆரம்பிக்கப்பட்ட ஆரம்ப வைத்தியப் பிரிவு, 23 வருடங்களைக் கடந்தும் எந்தவித தரமுயர்வும் இல்லாமல் அதேநிலையில் இருப்பது, மிகவும் வேதனையான விடயமாகும்.

இங்கு நிரந்தர வைத்தியரும் இல்லை; தாதியரும் இல்லை. இரவு நேரத்தில் அவசர நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க எந்த வசதியும் இல்லை. அத்துடன், அவசர சிகிச்சைக்காகத் தொலைவில் உள்ள அம்பாறை, சம்மாந்துறை வைத்தியசாலைகளையே இம்மக்கள் நாடவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையும் காணப்படுகின்றது.

தேர்தல் காலங்களில் வாக்குகளுக்காகப் படையெடுக்கும் அரசியல்வாதிகள், இம்மக்களின் குறைகளைக் கேட்டறிந்தும் இதுவரை எந்தவித ஆக்கபூர்வமான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை என மக்கள் அங்கலாய்க்கின்றனர்.

சுமார் 10,000 இற்கும் மேற்பட்ட மக்கள் வாழும் மல்வத்தை உட்பட சுற்றிவரையுள்ள கிராமங்களில் அத்தியாவசிய தேவையாகிய இந்த வைத்தியசாலையை 'C' தர பிரதேச வைத்தியசாலையாக மாற்றி, நிரந்தர வைத்தியரையும் தாதியையும் தங்கி இருந்து சேவை செய்யக்கூடிய வகையில் தரமுயர்த்த வேண்டும் என்பதே, மக்களின் கோரிக்கையாகக் காணப்படுகின்றது.

–ரவி கிருஷ்ணபிள்ளை

## தேர்தல் கால

# முகமூடிகளும் முகக் கவசங்களும்

மொஹமட் பாதுஷா

ஒவ்வொரு கட்சியினதும் வேட்பாளரினதும் போலி முகமூடிகளைக் கழற்றி, உண்மை முகங்களைக் கண்டறிவதுடன், சுகாதார நடைமுறைகளுக்காக, முகக் கவசங்களை அணிந்து கொள்ள வேண்டிய ஓர் இக்கட்டான காலகட்டத்தில், இலங்கை மக்கள் இருக்கின்றனர். முஸ்லிம்களும் தமிழ் மக்களும் இந்த விடயத்தில், அதீத கரிசனை எடுத்துக் கொள்ளவில்லை என்றால், ஓகஸ்ட் ஐந்தாம் திகதிக்குப் பின்னர், கைசேதப்பட வேண்டி வரலாம்.

இந்தத் தேர்தலும் அதற்குப் பின்னர் அமையப் போகின்ற நாடாளுமன்றமும் மிக முக்கியத்துவம் வாய்ந்தவையாக இருக்கப் போகின்றன.

எந்தப் பெருந்தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும், அரசமைப்பு மறுசீரமைப்பு, எம்.சி.சி உடன்படிக்கை, அதிகாரப் பகிர்வு கோட்பாடு, மாகாண சபை முறைமை மீளாய்வு, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அடுத்தகட்டம் உள்ளடங்கலாகப் பல நகர்வுகள், உடனடியாக நடந்தேறலாம் என்ற எதிர்பார்ப்புக் காணப்படுகின்றது.

எனவே, முஸ்லிம் சமூகம், அடுத்த நாடாளுமன்றத்தில் தமது பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்துவதுடன், அந்த எம்.பிக்கள் 'பொருத்தமானவர்'களாக, 'தகுதியுடையவர்'களாக, சமூகசிந்தனை உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதையும் மறந்து விடக் கூடாது. அப்படியென்றால், வேட்பாளர்களின் போலி முகமூடிகளை அகற்றி, முகத்திரைகளைக் கிழித்து நோக்குவது கட்டாயமாகின்றது.

சமகாலத்தில், சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டிய தேவையும் அதிகரித்துள்ளது. நாட்டை வழமைக்குத் திருப்பி, பொருளாதார ரீதியாக ஸ்திரப்படுத்தும் நோக்கத்தோடு, அரசாங்கம் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி விட்டமையாலும், இலங்கையில் வாழ்கின்ற எல்லாச் சமூகங்களைச் சேர்ந்த அடிமட்ட மக்கள் தொடக்கம், தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடும் அரசியல்வாதிகள் வரை, சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்காமல் செயற்பட்டமையாலும், இன்று நிலைமைகள் பாதகமாக மாறி வருகின்றன.

ஓகஸ்ட் ஐந்தாம் திகதி, தேர்தலை நடத்துவதாக அறிவிக்கப்பட்ட பின்னரும், தொடர்ச்சியாக கொவிட்-19 தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. நேற்று (16) காலை நிலைவரப்படி, 2,674 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். ஆனால், கொரோனா வைரஸ் பற்றிய செய்திகளை எல்லாம் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, அரசியல்வாதிகளும் கணிசமான மக்களும் தேர்தல் பிரசாரங்களில் கவனம் செலுத்தியமையால், இன்று சமூகத்துக்குள் இருந்தும் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

படையினருக்கும் வெளிநாடுகளில் இருந்து வருவோருக்குமே கொரோனா வைரஸ் தொற்று உள்ளது என்றும் சமூக மட்டத்தில் தொற்று ஏற்படாதவாறு கட்டுப்படுத்தப்பட்டு விட்டதாகவும் அரசாங்கம் கூறிக் கொண்டிருந்தது. இந்நிலையிலேயே, கந்தக்காடு போதைப்பொருள் புனர்வாழ்வு நிலையம் தொடக்கம், சிறைக்கைதிகள் ஈறாக, அவர்களுடன் தொடர்பிலிருந்த சமூகத்துக்குள் வாழும் நபர்கள் வரையிலும், வைரஸ் தொற்று வியாபித்து இருக்கின்றது.

இதனால், பல மாவட்டங்களைச் சேர்ந்த சுமார் 3,000 பேர் தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதுடன், நூற்றுக் கணக்கானோருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுகாதார விதிமுறைகள் பற்றி, மீண்டும் காட்டமான அறிவிப்புகளைச் செய்துள்ள அரசாங்கம், பாடசாலைகளையும் ஏனைய கல்வி நிறுவனங்களையும் மூடியுள்ளது.

ஆனால், அலுவலகங்கள் இயங்குவதுடன் போக்குவரத்துச் சேவைகளும் இடம்பெறுகின்றன. இதன்மூலம், இயல்புநிலை இருப்பதான தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், திடீரெனத் தொற்றாளர்கள் அதிகரித்தமை, மக்களிடையே ஒருவித அச்சத்தை உண்டுபண்ணியுள்ளதை மறைக்க முடியாது.

"கொவிட்-19 விடயத்தில், அரசாங்கம் திருப்தியான நடவடிக்கைகளை எடுக்கத் தவறிவிட்டது" என, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது. ஒரு வாரத்துக்கு, தேர்தல் பிரசாரங்களை இடைநிறுத்துமாறு அறிவுறுத்தியுள்ள சுகாதாரத் தரப்பினர், கொரோனா வைரஸின் பரவலின் ஆபத்து, இன்னும் அதிகரிக்கலாம் என்று எச்சரிக்கை செய்துள்ளது.

ஆனாலும், "இது, இரண்டாவது அலை இல்லை" என்று, இராணுவத் தளபதி சொல்லியிருக்கின்றார். இதே கருத்தைக் கூறியுள்ள பிரதிப் பொலிஸ் மா அதிபர், "கொரோனா வைரஸ் பரவுகை கட்டுப்படுத்தப்பட்டு இருக்கின்றது" என்று, தன்பங்குக்குக் குறிப்பிட்டிருக்கின்றார்.

நிஜத்தில், கொவிட்-19 பற்றிய அச்சம் மக்களிடையே மீளத் தலைதூக்கியிருப்பினும், சுகாதாரக் கட்டுப்பாடுகளைக் கிட்டத்தட்டக் கைவிட்டு விட்டார்கள் என்றே தோன்றுகின்றது. மக்களுக்கு முன்மாதிரியாகச் செயற்பட வேண்டிய ஆளும், எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள், பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள், சில பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் கூட, சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதைப் பெரிதாகக் காண முடியவில்லை.

இப்போது, பெரிய பொதுக் கூட்டங்கள், மக்கள் சந்திப்புகள் ஆங்காங்கே நடைபெறுகின்றன. ஆள் எண்ணிக்கை கட்டுப்பாடுகள் கிடையாது. பிரசார மேடைகளில், சமூக இடைவெளி இல்லை. பிரசாரக் கூட்டங்களுக்கு வருகின்ற மக்கள், மிக நெருக்கமாக நிற்கின்றனர். குறிப்பாக, முஸ்லிம் பிரதேசங்களில், இந்தத் தேர்தலிலும் தலைவர்களைப் பார்ப்பதற்காகவும் அவரது கையைத் தொடுவதற்காகவும் கட்டி அணைப்பதற்காகவும் ஆதரவாளர்கள் முண்டியடிப்பதை அவதானிக்க முடிகின்றது. சிங்கள, தமிழ் வேட்பாளர்கள் அநேகரின் தேர்தல் பிரசாரங்களும் இவ்விதமே அமைந்துள்ளன.



**எப்பாடுபட்டாவது வாக்களிப்பை நடத்தி முடிக்கும் நிலைப்பாட்டில் இருந்து, அரசாங்கம் பின்வாங்காது. கட்டுப்பாடுகளை இறுக்கிக் கொண்டு, தேர்தலைக் கடந்து செல்ல அரசாங்கம் முனைகின்றது**

**வேட்பாளர்கள் முகக்கவசம் அணிந்து வந்தாலும் வராவிட்டாலும், மக்களாகிய நீங்கள், அவர்களது போலி முகமூடிகளைக் கிழித்து, அவர்களது உண்மையான முகத்தைப் பார்க்க வேண்டும்**

**இயல்புநிலை இருப்பதான தோற்றப்பாட்டை ஏற்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டாலும், திடீரெனத் தொற்றாளர்கள் அதிகரித்தமை, மக்களிடையே ஒருவித அச்சத்தை உண்டுபண்ணியுள்ளது**

கொவிட்-19 தொடர்பான ஒழுங்குவிதிகள் எல்லாம், எழுத்திலும் அறிக்கைகளிலும் மட்டுமே இருப்பதாகத் தெரிகின்றது. ஆனால், எல்லாம் கட்டுப்பாட்டில் இருப்பதாக, அரசாங்கம் கூறி வருகின்றது. தேர்தல் நடத்தும் திட்டமும் அதற்கான முன்னேற்பாடுகளும் குழம்பிவிடக் கூடாது என்பதில், ஆளும் தரப்பு மிகக் கவனமாக இருக்கின்றது என்பதையும், இத்தகைய அணுகுமுறைகள் வெளிக்காட்டுகின்றன.

நிலைமை இவ்வாறே போனால், கொரோனா வைரஸ் பரவலுக்காக மட்டுமன்றி, வெளியில் தெரியாத ஓரிரு காரணங்களுக்காகவும் ஒருவேளை தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்கு இம்மியளவு வாய்ப்புகள் இல்லாமலில்லை என்று, இரகசிய தகவல்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

இருந்தபோதிலும், தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு, தபால்மூல வாக்களிப்பும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற நிலையில், தேர்தல் ஒத்திவைக்கப்பட மாட்டாது என்பதையே, தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளரின் ஆகப் பிந்திய அறிவிப்பு உணர்த்தி நிற்கின்றது.

உறுதியற்ற நாடாளுமன்றம் பற்றிய கடந்தகால கசப்பான அனுபவங்களின் அடிப்படையில், இந்தமுறை அதிக ஆசனங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெறவே, பிரதான கட்சிகள் பகிரதப் பிரயத்தனங்களை எடுக்கின்றன. குறிப்பாக, ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற ஆளும் கட்சிக்கு, இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது, அதுவும் மூன்றிலிரண்டு பெரும்பான்மையைப் பெறுவதே, பேரவாவாகக் காணப்படுகின்றது.

கடந்த நாடாளுமன்றத்தில், அறுதிப் பெரும்பான்மை இல்லையென்ற நிலையிலேயே ஜனாதிபதி நாடாளுமன்றத்தைக் கலைத்தார். பெரும்பான்மைப் பலம் இல்லாமல், எதையும் செய்ய முடியாது என்பதை ஆட்சியாளர்கள் நன்கறிவர். அதுமட்டுமன்றி, தமக்குத் தேவையான மாற்றங்களை, திருத்தங்களை, கொள்கை வகுத்தல்களை மேற்கொள்வதற்கு மூன்றிலிரண்டைப் பெற வேண்டும் என்ற திடசங்கற்பத்துடனேயே, ஆளும் தரப்பு இத்தேர்தலில் குதித்தது என்பதையும் நாமறிவோம்.

ஸ்திரமான ஆட்சியொன்றைக் கொண்டு செல்வதற்கு மட்டுமல்லாமல், தீர்க்கமான திருத்தங்கள், தீர்மானங்களை எடுப்பதற்கு மூன்றிலிரண்டு அவசியமாகும். இருப்பினும், இத்தேர்தலில் எந்தப் பெரும்பான்மைக் கட்சியும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவது சிரமம் என்றே இப்போதைக்குக் கூற முடிகின்றது.

அப்படியென்றால், வெற்றிபெறும் பெரும்பான்மைக் கட்சியானது, பிறிதொரு பெரும்பான்மைக் கட்சியையோ, முஸ்லிம், தமிழ்க் கட்சிகளையோ இணைத்துக் கொண்டாலோ அல்லது, தனித்தனியாக எம்.பிக்களைத் தம்பக்கம் எடுத்தாலோ மாத்திரமே, மூன்றில் இரண்டு சாத்தியமாகும்.

இந்த அடிப்படையில் நோக்கினால், எப்பாடுபட்டாவது வாக்களிப்பை நடத்தி முடிக்கும் நிலைப்பாட்டில் இருந்து, அரசாங்கம் பின்வாங்காது. கட்டுப்பாடுகளை இறுக்கிக் கொண்டு, தேர்தலைக் கடந்து செல்ல அரசாங்கம் முனைகின்றது. அதன்படி, அவசியமான சுகாதார விதிமுறைகளை உள்ளடக்கிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலையும் இரு தினங்களுக்குள் அரசாங்கம் வெளியிடவுள்ளது. ஆனால், சட்டங்கள், விதிகள் ஆகியவை எழுத்தில் இருப்பதால் மட்டும், கொவிட்-19ஐக் கட்டுப்படுத்த முடியாது.

அரசாங்கமும் தேர்தல் ஆணைக்குழுவும் தேர்தல் காலத்தில் கட்டுப்பாடுகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதுடன், மக்களும் அவ் விதிமுறைகளைக் கடைப்பிடித்துக் கொண்டே, சரியான மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டியது, தேர்தல் கால நியதியாகியுள்ளது.

முஸ்லிம் சமூகம், மிகவும் விழிப்புடனும் தெளிவுடனும் இந்த முறை, எம்.பிக்களைத் தெரிவு செய்வது மிக முக்கியமான விடயமாகும். முஸ்லிம் கட்சிகளிலும், பெரும்பான்மைக் கட்சிகளிலும் போட்டியிடுகின்ற முஸ்லிம் வேட்பாளர்கள் பற்றி, அந்தந்த மாவட்டங்களிலுள்ள மக்கள் போதுமானளவுக்கு அறிவார்கள்.

இந்தத் தேர்தலில், முன்னாள் எம்.பிக்களும் புதுவரவுகளுமாக நூற்றுக்கு மேற்பட்ட முஸ்லிம் வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். மக்கள் சேவையாற்றியவர்கள், சமூகத்துக்காகக் கொஞ்சமேனும் வாய் திறப்பவர்கள், புத்திஜீவிகள், சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பலவிதமான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

அதைவிட, அதிக எண்ணிக்கையில், மக்களைக் காலம்காலமாக ஏமாற்றிய அரசியல்வாதிகள், போதைப் பொருள் வியாபாரத்துக்குத் துணை நிற்பவர்கள், மது, மாது விடயத்தில் பலவீனமானவர்கள், முன்னர் தனக்குக் கிடைத்த எம்.பி பதவியை, சமூகத்துக்காகப் பயன்படுத்தாதவர்கள், உழைப்பதற்காக மட்டும் அரசியலுக்கு வந்தவர்கள் என்ற வகைக்குள் அடங்குவோரும் களமிறங்கியுள்ளனர்.

எனவே, வாக்காளர்களாகிய மக்கள், சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன், வேட்பாளர்களின் பண்புகளைப் பிரித்தறிய வேண்டும். அவர்கள், முகக்கவசம் அணிந்து வந்தாலும் வராவிட்டாலும், மக்களாகிய நீங்கள், அவர்களது போலி முகமூடிகளைக் கிழித்து, அவர்களது உண்மையான முகத்தைப் பார்க்க வேண்டும். அதன்பின்னர், 'இவர் பொருத்தமான பிரதிநிதியா?' என்ற முடிவை, ஒவ்வொரு வாக்காளனும் எடுக்க வேண்டும்.

இவ்வளவு காலமும், முஸ்லிம் அரசியல்வாதிகள் செய்த தவறுகள், சமூக அரசியலுக்கு உதவாத காரியங்களுக்கு அவர்களே, பிரதான பொறுப்புதாரிகள். என்றாலும், அவ்வாறான நபர்களை நம்பி, மீண்டும் மீண்டும் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்தவர்கள், முஸ்லிம் மக்களே என்ற வகையில், முஸ்லிம் அரசியல் சீரழிந்து போனதில், முஸ்லிம் வாக்காளர்களுக்கும் பங்கிருக்கின்றது. எனவே, அந்தத் தவறுகளுக்குப் பிராயச் சித்தம் காண்பதற்கான சந்தர்ப்பமாக இத்தேர்தலைப் பார்க்க வேண்டும். 'அழகான' முகமூடிகளை அணிந்து கொண்டு, வாக்குக் கேட்டு வருகின்ற 'அவலட்சணமான' வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதன் மூலம், கடந்த காலங்களில் விட்ட தவறை, முஸ்லிம் மக்கள் இன்னுமொரு தடவை புதுப்பித்துவிடக் கூடாது.



## இனவெறுப்பு எனும் மோசமான ஆயுதம்

இலங்கையில் பௌத்த தர்ம பாடசாலைகளை மூடச் சொல்லும் அதிகாரம், முஸ்லிம் சமூகத்துக்கு இல்லை. அதேபோல், பௌத்த தேரர்களின் காவி உடைகளை விமர்சிக்கும் உரிமையும் முஸ்லிம்களுக்கோ, வேறு எந்த இனத்தவருக்கோ இல்லை.

இந்த மத உரிமை, சிங்களப் பௌத்தர்களுக்கு மட்டுமன்றி இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க, முஸ்லிம் மக்களுக்கும் இருக்கின்றது. இந்த உரிமையை, இலங்கையின் அரசமைப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

**"பௌத்த தர்ம பாடசாலைகளை மூடச் சொல்லும் அதிகாரமோ தேரர்களின் காவி உடைகளை விமர்சிக்கும் உரிமையோ முஸ்லிம்களுக்கோ, வேறு இனத்தவருக்கோ இல்லை. இந்த மத உரிமை, சிங்களப் பௌத்தர்களுக்கு மட்டுமன்றி இந்து, கிறிஸ்தவ, கத்தோலிக்க, முஸ்லிம் மக்களுக்கும் இருக்கின்றது**

அப்படிப் பார்த்தால், முஸ்லிம்களின் ஆடைகள் பற்றியோ, மத போதனைகள் பற்றியோ அடிப்படையற்ற விதத்தில் பேசுவதானது, மதவெறுப்பு மட்டுமன்றி, அரசமைப்பின் நியதிகளை மீறுகின்ற செயலுமாகும். ஆனால், இப்படியான சம்பவங்களை, முஸ்லிம்கள் தொடர்ச்சியாக எதிர் கொண்டு வருகின்றனர்.

கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளரான அத்துரலிய ரத்தன தேரர், "முஸ்லிம்களின் மார்க்க போதனை மயங்களான மத்ரசாக்களை மூட, அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று, அண்மையில் குறிப்பிட்டுள்ளார். இதற்காக, ஜம்இய்யதுல் உலமா சபைக்கு ஒருவார கால அவகாசத்தைத் தேரர் கொடுத்துள்ளார். முஸ்லிம்கள் புர்காவைத் தவிர்க்க வேண்டும் என்பதும், அவரது இன்னொரு கருத்தாகும்.

மத்ரசாக்கள் குண்டுத்தாரிகளை உருவாக்கும் இடங்களாக மாறியுள்ளன என்ற, பாரதுரமான கருத்தொன்றைக் கூறியுள்ள அத்துரலிய தேரர், மேற்கூறப்பட்ட கோரிக்கை நிறைவேறாவிட்டால், முஸ்லிம்களின் வர்த்தகத்தைப் புறக்கணிக்கப் போவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இவர்தான், மூன்று முஸ்லிம் அரசியல்வாதிகள் இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று உண்ணாவிரதம் இருந்தவராவார். இப்போது தேர்தலில் வெற்றி பெறுவதற்காக, இனவாதக் கருத்துகள் எனும் மோசமான ஆயுதத்தைக் கையில் எடுத்திருக்கின்றார் என்றே கருத வேண்டியுள்ளது. இவர் போல, இன்னும் பலரும் உள்ளனர்.

இதேவேளை, மேற்படி தேரரின் இவ்வாறான இனவெறுப்புச் செயற்பாடுகளை, வேறு சில முற்போக்குத் தேரர்கள் பகிரங்கமாகவே விமர்சித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன், கொழும்பில் போட்டியிடும் வேட்பாளர் சுசில் கிந்தல்பிட்டிய, "தர்ம பாடசாலைகளில், பாளி மொழியைப் போதிக்க முடியுமென்றால், மத நூலான குர்ஆனை விளங்கிக் கொள்வதற்காக, மத்ரசாக்களில் அரபு போதிப்பதை எதிர்க்க முடியாது" எனக் கூறியுள்ளார்.

**"தமிழர்களை அடக்கியது போன்று, முஸ்லிம்களை அடக்குவதற்காக முஸ்லிம்களுக்கு எதிரான இனவாத முன்னெடுப்புகளால் நொந்து போகும் முஸ்லிம் சமூகத்துக்கு, முற்போக்கு சிங்கள சக்திகளின் ஆதரவான கருத்துகள் ஆறுதலாக அமைகின்றன**

தமிழர்களை அடக்கியது போன்று, முஸ்லிம்களை அடக்குவதற்காகவும் மேற்குலகின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒருங்கிசைவாகவும் இலங்கையில் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படுகின்ற இனவாத முன்னெடுப்புகள், இனவெறுப்புப் பேச்சுகளால் நொந்து போகும் முஸ்லிம் சமூகத்துக்கு, முற்போக்கு சிங்கள சக்திகளின் ஆதரவான கருத்துகள் ஆறுதலாக அமைகின்றன. அதுமட்டுமன்றி, சிங்கள மக்களில் பெரும்பாலானோர் இனவாதத்துக்கு எதிரானவர்கள் என்பதையும் இது உணர்த்தி நிற்கின்றது.

எவ்வாறிருப்பினும், இத்தேர்தலில் 'மூன்றில் இரண்டு பெரும்பான்மை' கனவுடன் இருக்கின்ற ஆளும் தரப்பு, முஸ்லிம் மக்களின் ஆதரவையும் வேண்டி நிற்கின்ற இத்தருணத்தில், இனக்குரோதப் பேச்சுகளைப் பேசி, இனவாதத்தைத் தூண்டிவிடும் அரசியல்வாதிகள், கடும்போக்காளர்களுக்குக் கடிவாளமிட முடியாவிட்டால்.... இனங்களுக்கு இடையிலான ஐக்கியம், 'ஒரே மக்கள் ஒரே தேசம்' என்ற இலக்கை அடைவது சாத்தியமில்லை.

## இருக்கும் அரசியல் கலாசாரத்தை மாற்ற

# ‘பூனைக்கு மாலை போடும் எலி தேவை’



கவிதா சுப்ரமணியம்



**அரசியல்வாதியாக அல்லாமல் சமூக சேவகனாக இருப்பேன்**

**புதிய புற்றுநோய் வைத்தியசாலை நிர்மாணிக்கப்படுவது உறுதி**

**முஸ்லிம்களுக்கான தலைமை அல்ல; நான் ஓர் அடித்தளம்**

“கடந்த 4 மாதகாலத்துக்குள், கொவிட் – 19ஆல் பாதிக்கப்பட்ட 11 பேர் உயிரிழந்தார்கள். ஆனால், கடந்த 6 மாதகாலத்துக்குள், புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 7,500 பேர் உயிரிழந்தார்கள் என்பது, எந்தவோர் அமைச்சருக்காவது தெரியுமா? 2025ஆம் ஆண்டு, உலகின் மிகப்பெரிய கொடிய நோயாக புற்றுநோய் மாறுமென, உலக சுகாதார ஸ்தாபனத்தால், சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. கொவிட் – 19ஐ வெல்வதற்காக இலங்கை கொடுத்த பாதுகாப்பையும் அவதானிப்புகளையும் புற்றுநோய்க்கும் வழங்கியிருந்தால், புற்றுநோயையும் இலங்கையில் ஒழித்துவிடலாம் என்று, கஜீதா ஃபவுண்டேஷன் மற்றும் Fight Cancer குழுவின் நிறுவுநரும் ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான எம்.எஸ். எச்.மொஹமட் தெரிவித்தார்.

தமிழ்மிரருக்கு அவர் வழங்கிய செவ்வியின் முழு விவரம் வருமாறு,

**கே: அரசியலில் கால்பதித்துள்ள உங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

கஜீதா ஃபவுண்டேஷன் மற்றும் Fight Cancer குழு ஆகியவற்றின் நிறுவுநராவேன். தேசிய சமாதானத் தூதுவருக்கான விருதும் பெற்றுள்ளேன். இலங்கையின் தேசிய சமாதானத்துக்காக என்னால் செய்யப்பட்ட பங்களிப்புக்கே, இந்த விருது வழங்கப்பட்டது. ஆசிய நாடுகளுக்காக வழங்கப்படவிருந்த இந்த விருதுக்கு, இலங்கையில் மாத்திரம் 400 பேர் விண்ணப்பித்திருந்தனர். இந்த 400 பேரில், எனக்கு மாத்திரமே இந்த விருது வழங்கப்பட்டது. எல்லா நாடுகளிலும், பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கே இந்த விருது வழங்கப்பட்டது. ஆனால், இலங்கையைப் பொறுத்தவரையில், சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த; தமிழ் பேசும் நபருக்கு இந்த விருது வழங்கப்பட்டமையானது, தமிழர்களுக்குக் கிடைத்த பெருமை என்றே நான் கூறுவேன்.

**கே: தற்போது நாட்டிலுள்ள அரசியல் நிலை குறித்த உங்கள் பார்வை என்ன?**

நிலையில்லாத அரசியலே நிலவுகிறது. இனவாதம் தலைதூக்கியமை மற்றும் தலைவர்களுக்குத் தலை மைத்துவத்தை வழங்க மறுக்கின்றமையே இந்நிலைமைக்குக் காரணமாகும். இப்படி இருந்தால், நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல முடியாது.

**கே: அரசியல் என்பதைத் தாண்டி, உங்களால் முன்னெடுக்கப்பட்ட சமூக சேவைகள் பற்றிக் கூறுங்கள்?**

கடந்த 20 ஆண்டுகளாக, நான் ஒரு சமூக சேவகனாகவே பணியாற்றி வருகின்றேன். கஜீதா ஃபவுண்டேஷனில், கல்வித்திட்டம், சுகாதாரத் திட்டம், விதவை மறுவாழ்வுத் திட்டம் என்று பல திட்டங்களை முன்னெடுத்து வந்தேன். நான்கு ஆண்டுகளுக்கு முன்னர்தான், Fight Cancer குழுவை ஆரம்பித்தேன். இது ஆரம்பிக்கப்பட்ட சில நாள்களிலேயே, ஆசியாவிலுள்ள மிகவும் சக்திமிக்க ஒரு குழுவாக உயர்ந்தது.

இந்தக் குழுவை மென்மேலும் உயர்ந்த இடத்துக்குக் கொண்டுசெல்வதற்கு, பல்வேறு முட்டுக்கட்டைகள் ஏற்பட்டன. மருத்துவ மாஃபியா, அரசியல் தலையீடு, இனவாதம் ஆகிய முட்டுக்கட்டைகளே ஏற்பட்டன.

நான் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த முஸ்லிம் என்பதால், கடந்த ஒரு வருடமாக, இந்தக் குழுவை முன்னோக்கி நகர்த்துவதற்காக, பல இன்னல்களுக்கு முகங்கொடுத்தேன்.

**கே: அரசியல் பிரவேசத்துக்கான காரணம் என்ன?**

இந்த fight Cancer குழு ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இன்று வரையான காலப்பகுதியில், எனக்கென்றும் எனது குழுவுக்கென்றும் ஓர் அதிகாரம் இருக்கவேண்டும் என்பதை நாம் கற்றுக்கொண்டோம். இலங்கையைப் பொறுத்தவரையில், இதை முன்னோக்கி நகரத்துவதற்கு, ஓர் அரசியல் பலம் தேவை. ஆசியாவிலே, புற்றுநோய்க்கு எதிராகப் போராடும் ஒரே குழு எங்களுடையதுதான். இதற்காக ஒரு பணிப்பாளர் நாயகத்தைச் சந்திப்பதற்கு, 2 மாதகாலம் காத்திருக்க வேண்டியேற்பட்டது. ஓர் அமைச்சரைச் சந்திக்கவேண்டும் என்றாலும், 2 மாதகாலம் காத்திருக்க வேண்டும். ஏனென்றால், எங்களிடம் அந்தளவுக்குச் சக்தி இல்லை. அது மாத்திரமல்லாது, மொஹமட் என்பவர் ஒரு முஸ்லிம் என்று, இனவாதிகள் எனக்கு முத்திரை குத்தினர். எனக்கு, பயங்கரவாதிகளுடன் தொடர்பு உண்டு என்ற போலிப் பிரசாரங்களையும் முன்னெடுத்து, எங்களது இந்த உன்னதமான பயணத்தை நிறுத்துவதற்கு முயன்றனர்.

> **225 பேரில் எவரெல்லாம் ஊழலில் ஈடுபடுகின்றார்களோ, அவர்களையும் நல்ல வழியில் கொண்டுசெல்ல முடியும். அப்படிப்பட்டவர்களையும் ஒரு தாமரையாக நான் வளரவைப்பேன்**

அரசியல் அழுத்தங்களும் அடுத்தடுத்து வந்து சேர்ந்தன. இதன்போதுதான், எங்கள் குழு, இந்தப் புற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தைக் கைவிட்டு, ஒரு சாதாரண பிரஜையாக இருப்பதா அல்லது அதிகாரத்தைக் கையிலெடுத்துக்கொண்டு முன்னோக்கிப் பயணிப்பதா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. அப்போதே, அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற முடிவுக்கு வந்தோம். அதற்காக, அதிகாரம் இருக்கும் அரசியலைத் தேர்வு செய்தோம்.

இதுபற்றி ஆராய்ந்துகொண்டிருக்கும் போதுதான், ஐக்கிய தேசிய கட்சியில் இருந்து அழைப்பு வந்தது. நான் அரசியல்வாதியல்ல. நான் எப்போதும் ஒரு சமூக சேவகனே. 225 பொதுச் சேவர்கள் இருக்கும் இடத்துக்குச் சென்று, தூய்மையான மக்கள் சேவகனாகக் குரல் கொடுக்கவேண்டும் என்பதே, எனது இலக்கு.

அந்த வகையிலேயே அரசியலுக்குப் பிரவேசித்தேன். நாடாளுமன்றம் செல்வதே எனது குறிக்கோள். அதனால், கட்சியையோ கட்சியின் நிறத்தையோ நாம் பார்க்கவில்லை. ஐக்கிய தேசிய கட்சியைத் தெரிவுசெய்தால் தோல்வியடைய முடியாது. பல முஸ்லிம் தலைவர்கள் உருவாகிய கட்சியாக ஐ.தே.க காணப்படுகின்றது.

நாடாளுமன்றம் செல்வதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது, 2025ஆம் ஆண்டு ஆகும்போது, இலங்கையில் அதிகளவு மக்கள் மரணிக்கும் கொடிய நோயாகப் புற்றுநோய் மாறிவிடும். இதைப் பற்றி யாருக்கும் எந்தக் கவலையும் இல்லை. இலங்கையில் ஒரு நாளைக்கு, 38 பேர் புற்றுநோய் காரணமாக மரணிக்கின்றனர். ஒரு நாளைக்கு 76 பேர், புதிய புற்றுநோயாளர்களாக இனங்காணப்படுகின்றனர். இது பற்றி, எந்தவொரு ஜனாதிபதியோ பிரதமரோ, அமைச்சரோ பேசுவதில்லை; கண்டுகொள்வதும் இல்லை. ஊடகங்களும் விழிப்புணர்வு வழங்கும் அளவு மிகக் குறைவாகவே உள்ளது. எனவே, தேசிய அளவிலான இந்தச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு, சக்தி, அதிகாரம், தொடர்புகளே தேவைப்படுகின்றன.

அடுத்ததாக, இன்று அத்தியாவசியத் தேவையாக இருப்பது, தேசிய சமானதானமாகும். கடந்த 30 ஆண்டுகளாக, தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சினையால், எமது நாடு, மிகவும் பின்னடைவைக் கண்டது. தற்போது 10 ஆண்டுகளாக, முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே காணப்படும் பிரச்சினை யுத்தமாக மாறாவிட்டாலும், இரண்டு இனங்களைச் சேர்ந்தவர்களும் மிகவும் கஷ்டப்படுகின்றனர். யாரைப் பார்த்தாலும் பயம், சந்தேகத்துடனேயே வாழவேண்டியுள்ளது. ஏப்ரல் 21ஆம் திகதி தாக்குதலே இதன் விளைவு. முஸ்லிம் சமூகத்துக்குச் சரியான தலைமைத்துவமொன்று இல்லை. கடந்தகால தேசிய தலைவர்களுடன், கடந்தகால முஸ்லிம் மற்றும் தமிழ்த் தலைவர்கள் அந்நியோன்யத்துடன் இருந்தனர். அவ்வாறு இருக்கும்போது, தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை நல்லதொரு விதத்தில் வென்றெடுத்தார்கள். விசேடமாக, முஸ்லிம் தலைமைத்துவம் என்று கூறிக்கொண்டிருப்போரிடம், மறைக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் மாத்திரமே உள்ளது.

இது தொடர்பில், பெரும்பான்மை மக்கள் விளங்கியே வைத்துள்ளனர். இந்தமுறை நடைபெறும் நாடாளுமன்றத் தேர்தலிலும், ஏற்கெனவே இருந்த தலைமைகளே நாடாளுமன்றத்துக்குச் சென்றால், இன்னும் பிரச்சினைகள் அதிகரிக்கும். மேலும் மேலும் எங்கள் தமிழ்ச் சமூகம் ஒதுக்கப்படும். தமிழர்களின் முகவரிகள் இல்லாமலாக்கப்பட்டு, கேவலப்படுத்தப்படுவார்கள். எனவே, பூனைக்கு மாலை போடும் எலியொன்று கட்டாயம் வேண்டும். எனக்கு, அரசாங்கத்தால் வழங்கப்படும் எந்தவொரு சலுகையும் தேவையில்லை. அமைச்சர்கள் பாவிக்கும் வாகனம், வீடுகளை விட, நல்ல சுகபோக வாழ்க்கை வாழ்ந்த நான், சமூகத்திலுள்ள தனிப்பிரஜையின் கடனைச் செலுத்துவதற்காகவே அரசியலுக்கு வருகின்றேன்.

> **இலங்கை என்பது பொன்னான நாடு. இங்கு வாழும் அனைத்தின மக்களும் பாக்கியசாளிகள். எத்தனையோ கலாசாரங்களையும் மதங்களையும், இனங்களையும் கொண்ட ஒரு வானவில்**

**கே: தேர்தலில் வெற்றி பெறுவீர்கள் என்ற நம்பிக்கை உண்டா?**

நான் மக்களின் உள்ளத்தில் வாழ்கின்றேன். Fight Cancer குழுவின் நிதித் திரட்டல் திட்டத்துக்கு ஆதரவு வழங்குவதற்காக, 3 இலட்சம் இலங்கையர்களை, வங்கிகளில் வரிசையில் காத்திருக்க வைத்துள்ளேன். அவர்களில் ஒருவர்கூட, நான் ஒரு முஸ்லிம் என்று பார்க்கவில்லை. என்னை ஓர் இலங்கையராகவே பார்த்து அணைத்துக்கொண்டார்கள். இந்த முக்கியமான சூத்திரத்தையே, இனவாதத்தை இல்லாதொழிப்பதற்கு நான் பயன்படுத்துவேன்.

அரசியல்வாதிகள் அல்லாமல், இனவாதத்தை இல்லாதொழித்து ஒற்றுமைப் பாலத்தைக் கட்டக்கூடிய என்னைப் போன்று பலர் உள்ளனர். முஸ்லிம் சமூகத் தலைவனாக வரவேண்டியது எனது இலக்கு அல்ல. என்னைவிடத் திறமைசாலிகள் உள்ள நிலையில், இனவாதத்தை இல்லாமல் ஒழிப்பதற்கான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதே எனது இலக்கு. எனவே, நிச்சயமாக மக்கள் எனக்கு ஆதரவு வழங்கி, என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்பிவைப்பர்.

ஏற்கெனவே இருந்த 225 பேரையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்பதே மக்களின் விருப்பமாக உள்ளது. ஆனால், அதை மக்களால் செய்ய முடியவில்லை. ஏனெனில், வேட்புமனுத் தாக்கலைச் செய்வது, அந்தப் பழைய 225 பேர் தான். வேட்புமனுக்களையும் மக்களிடமே கொடுக்கவேண்டும் என்றவொரு முறைமை வந்தால், திருடர்களை மக்கள் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள்.

தேர்தலில் வெற்றிபெற்றால், புற்றுநோய் ஒழிப்புக்காகப் புதியதொரு புற்றுநோய் வைத்தியசாலையை நிர்மாணிப்பேன். அத்துடன், ஏற்கெனவே இருக்கும் வைத்தியசாலையையும், அதிசிறந்த தொழில்நுட்ப வசதிகள் கொண்ட வைத்தியசாலையாகவும் மாற்றிக்காட்டுவேன். அதற்கான திறமை என்னிடம் உண்டு.

**கே: நீங்கள், கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகின்ற நிலையில், இங்குள்ள மக்களுக்குக் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டுள்ளீர்களா?**

தொழில், வீட்டுப் பிரச்சினை ஆகியனவே பிரதான பிரச்சினைகளாக இருக்கின்றன. பக்கத்திலேயே பாடசாலை இருக்கும். ஆனால், பிள்ளைகளை அந்தப் பாடசாலையில் சேர்க்க முடியாது. பணக்காரர்களும் பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த அமைச்சர்களும், அவர்களது பலத்தை வைத்தும் அதிகாரத்தை வைத்தும், கொழும்பிலுள்ள நல்ல பாடசாலைகளில், அவர்களது பிள்ளைகளைச் சேர்த்துக் கொள்வார்கள். இதனால், கொழும்பிலுள்ள சாதாரண மக்களது பிள்ளைகள், பல கிலோமீற்றர்களைத் தாண்டிச் சென்று கல்வி கற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இது, வெகுநாள்களாக நீடித்தால், எதிர்காலப் பரம்பரையின் கல்வி வெகுவாகப் பாதிக்கும்.

இதற்கு, என்னிடம் நல்ல திட்டங்கள் உள்ளன. எந்தவொரு பிரச்சினைக்கும், ஒரே இரவில் தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது. நான் ஜனாதிபதியில்லை. ஆனால், என்னுடைய குரல் மூலம் பலரின் கண்கள் திறக்கப்படும் என நான் நம்புகிறேன். சில அரசியல்வாதிகள், விமர்சனங்களை மாத்திரமே முன்வைப்பர். விமர்சனத்தை முன்வைப்பதால், எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு கிடைக்காது.

**கே: முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உங்களுக்கு, அம்மக்கள் தற்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்துத் தெரியுமா?**

முஸ்லிம் மக்களுக்கு, சகவாழ்வு வேண்டும். தங்களது எதிர்காலத்துக்கு என்ன நடக்கும் என்று தெரியாமல், அச்சத்தின் மத்தியிலேயே வாழ்ந்து வருகின்றனர். இதற்கு ஓர் உத்தரவாரம் கொடுக்கப்படல் வேண்டும். ஆனால், தற்போது இருக்கும் முஸ்லிம் தலைவர்களிடம், இதற்கான உத்தரவாதம் இல்லை. சமாதானம் என்று யாரேனும் கையை நீட்டினாலும், அந்தக் கையைத் தட்டிவிடும் தலைமைகளே காணப்படுகின்றன.

இந்தச் சகவாழ்வைக் கொண்டுவந்தாலே, முஸ்லிம்களின் பாதிப் பிரச்சினைகள் முடிந்துவிடும். அதை விடுத்து, 10 பிரச்சினைகளை முன்வைத்து, முஸ்லிம்களுக்கு இந்தப் பிரச்சினைகளே காணப்படுகின்றன என்று கூறவேண்டும் என்றால், பொய்யைத்தான் கூறவேண்டும்.

**கே: வாக்காளர்களுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

இலங்கை என்பது பொன்னான நாடு. இங்கு வாழும் அனைத்தின மக்களும் பாக்கியசாலிகள். எத்தனையோ கலாசாரங்களையும் எத்தனையோ மதங்களையும், எத்தனையோ இனங்களையும் கொண்ட ஒரு வானவில்தான் இலங்கை. இதன் பெறுமதி யாருக்கும் தெரியவில்லை. இந்தப் பெறுமதி என்ன என்பதை நாம் காண்பிக்க வேண்டும். என்னோடு உள்ளவர்கள் எல்லோரும் கல்விமான்களும் புத்திஜீவிகளும்தான்.

225 பேரில் எவரெல்லாம் ஊழலில் ஈடுபடுகின்றார்களோ, அவர்களையும் நல்ல வழியில் கொண்டுசெல்லக்கூடிய குழுவொன்று என்னிடம் உண்டு. அப்படிப்பட்டவர்களையும் ஒரு தாமரையாக நான் வளரவைப்பேன். புரட்சி செய்யவோ விமர்சனம் செய்யவோ, நான் அரசியலுக்குள் நுழையவில்லை. நல்லதொரு மாற்றத்துக்காக என்னுடன் வந்து இணைந்துகொள்ளுங்கள்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 17 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.